



ஞான ரகசியங்களை முதல் முறையாக வெளிப்படுத்திய நூல்.




திருவருட் பிரகாச வள்ளலார்
இராமலிங்க சுவாமிகள்



சத்திய ஞானசபை தன்னுள்கண்ட சுத்தஞானி
சத்திய சமரசசுத்த சன்மார்க்கம் தந்தஞானி
சத்திய வேதம்அருட்பா தந்தவள்ளல் தத்துவஞானி
சத்திய மிதுதான்என சாகாநிலைபெற்ற வித்தகஞானி

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



கண்மணி மாலை



மாலை தொடுத்தவர் :

ஆன்மீகச் செம்மல் - ஞானசற்குரு
சிவ. செல்வராஜ்
தங்கஜோதி ஞான சபை
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
17/49P, கலைஞர் குடியிருப்பு, கன்னியாகுமரி - 629 702
www.vallalyaar.com
Cell : **9245153454**

பதிப்பு விபரம்

முதல் பதிப்பு	:	21-03-1992 - 500 பிரதிகள்
நூல்	:	கண்மணி மாலை
ஆசிரியர்	:	சிவ செல்வராஜ்
வெளியிட்டோர்	:	ஜோதி குருஞானசபை நாகர்கோவில் ஆரல்வாய்மொழி குமாரகோவில்
புதிய பகுதிகளுடன் புதிய பதிப்பு	:	10-09-2002 1000 பிரதிகள்
மூன்றாம் பதிப்பு	:	31-08-2003 - 1000 பிரதிகள்
நான்காம் பதிப்பு	:	25-01-2005 தைப்பூசம் 1000 பிரதிகள்
ஐந்தாம் பதிப்பு	:	01-02-2007 தைப்பூசம் 1000 பிரதிகள்
ஆறாம் பதிப்பு	:	20-01-2011 தைப்பூசம் 2000 பிரதிகள்
ஏழாம் பதிப்பு	:	15–10–2012 குருபூஜை 2000 பிரதிகள்
வெளியிடுவோர்	:	தங்கஜோதி ஞான சபை சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் 17/49P, கலைஞர் குடியிருப்பு கன்னியாகுமரி - 629 702
உரிமை	:	S.S. சுயம்ஜோதி யார் வேண்டுமானாலும் வெளியிடலாம்
காணிக்கை	:	ரூ. 50
அச்சிட்டோர்	:	நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், 67/1 கோர்ட் ரோடு, நாகர்கோவில் போன் : 233853



காணிக்கை



மாதர் பிதாவுக்கு மகனின் அன்பு காணிக்கை
கண்மணி மாலை எனும் இக்கருத்து கருவூலத்தை
எனை ஈன்ற தாய் தந்தை பொற்பாத
கமலங்களில் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஆன்மிகச் செம்மல் - ஞானசற்குரு
சிவ செல்வராஜ்
தங்கஜோதி ஞான சபை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

தங்கஜோதி ஞான சபை
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
கன்னியாகுமரி

மகிழ்ச்சியுரை

ஆன்மநேய ஒருமைப்பாடுடையீர்,

வந்தனம். நன்றி. "மரணமிலா பெருவாழ்வு" உலகமெலாம் அறிய வேண்டியே திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் திருஅருட்பாவை தந்தருளினார்!

1823-புரட்டாசி மாதம் சித்திரை நட்சத்திரத்தில் தோன்றிய ஞான சூரியன் வள்ளலார் தமது 51-வயதில் தை மாதம் பூச நட்சத்திர நாளில் 1874-ல் ஒளி உடலாகி அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரோடு கலந்து எங்கும் நிறைந்தார்!

ஞான சற்குரு - உலக குரு - உண்மை குரு - மெய்ஞ்ஞான குரு - தமிழ்த் தாய் ஈன்ற குரு - அருட்பெருஞ்சோதி ஆண்டவரின் செல்லப்பிள்ளை நமது திருவருட் பிரகாச வள்ளல் பெருமான் ஒளி உடல் பெற்று 137 ஆண்டுகள் நிறைவு பெற்று 138-வது ஆண்டு இந்த 2011 தைப் பூச நன்னாள்!

1980-ல் எம்மை ஆட்கொண்ட வள்ளலார், 1992-ல் உலகிலேயே முதன் முதலாக மெய்ஞ்ஞான இரகசியங்களை வெளிப்படுத்தி "கண்மணி மாலை" எனும் இந்நூலை எழுத வைத்து, வெளியிடச் செய்து பரிபூரண நல்லாசி வழங்கினார்!

கடந்த 30 வருடமாக அடியேன் பட்ட பாடு எங்குரு வள்ளலாரே அறிவார்! சொந்த பந்தம், ஆன்மீகம் பேசுவோர் என யாருமே எனக்கில்லை! இரகசியம் என பிதற்றுவோர் மத்தியில் உண்மை ஞானத்தை வெளியிட்டதால் கிடைத்த திட்டும் அவமானமும் தான் அதிகம்!

எங்குரு வள்ளலார் இன்னும் பல சித்தர் பெருமக்கள், ஆபத்பாந்தவன், ஞான பண்டிதன், வாலை என்னுயிர் காத்து இன்றும் எம்மை, மனைவி மகனை காத்தருள்கிறார்கள். என்ன புண்ணியம் செய்தேனோ? இப்பிறவி புனிதம் அடைந்தது!

எமது ஆன்மீக வாழ்வு தொடங்கிய 30 வருடங்களில் 32 நூற்கள் அடியேன் எழுதி வெளியிட வள்ளல் பெருமான் அருள் புரிந்தார்! 33வது நூலாக வள்ளல்பெருமானின் அகவல் இலவச நூலாக வெளியிட்டு புண்ணியம் பெற்றோம் நானும் மனைவி மகனும்!

கர்ம வினைகளை குரு வள்ளல் பார்வையால் கடந்து வந்தேன்! தலைக்கு வந்தவை தலைப்பாகையோடு போனது வள்ளல் பெருமானின் கருணையினால்! என்னை சார்ந்தவர்களும் நல்வாழ்வு பெற்றனர்! தகுந்த முறையில் அடியேனை பக்குவப்படுத்தி குருபீடத்திலும் அமர்த்தினார் வள்ளலார்! வாலைத்தாய் கன்னியாகுமரியிலே இருக்க இடமும் தந்து காத்து இரட்சிக்கிறாள்!

நெய்வேலி ஜோதி ஸ்ரீ நிர்மலாதேவி அம்மாவும், அவரது மகன் ஜோதி ஸ்ரீ நகுலன் அவர்களும், அவரது மனைவி ஜோதி ஸ்ரீ அருள்மொழி அவர்களும், நாகர்கோவில் ஜோதி ஸ்ரீ ராஜா அவர்களும், முன்னின்று

கன்னியாகுமரியில் எமக்கு வீடும், அன்பர்களுக்கு உபதேசம் தீட்சை நல்கிட தங்க ஜோதி ஞான சபையும் கட்டித் தந்தார்கள்! எம்மிடம் தீட்சை பெற்ற நெய்வேலி அன்பர்கள் பலரும், சென்னை ஜோதி ஸ்ரீ முருகேசன் அவர்களும், ஜோதி ஸ்ரீ நாராயணா அவர்களும், ஜோதி ஸ்ரீ கோபாலகிருஷ்ணன் அவர்களும் வீடும் சபையும் கட்டித்தந்து இன்றும் எம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கிறார்கள்! என்றென்றும் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

www.vallalyaar.com என்ற இணையதளத்தை ஆரம்பித்து பெங்களூர் ஜோதி ஸ்ரீ வசந்த், ஜோதி ஸ்ரீ விஜயன், ஜோதி ஸ்ரீ பாலு, பவானி ஜோதி ஸ்ரீ சதீஷ், கடலூர் ஜோதி ஸ்ரீ விமல் ஆகியோர் ஆற்றிய ஒப்பற்ற பணியால் இன்று உலக முழுவதும் "கண்மணி மாலை" புகழ் பரவியிருக்கிறது. நன்றி பலகோடி!

இது கண்மணி மாலையின் 6-வது பதிப்பு! எம்மை மெய்ஞ்ஞான இரகசியங்களை உலகறியச் செய்வித்த வள்ளல் பெருமான் எத்துன்பமும் வராது கூடவே இருந்து காத்து அருள்கிறார்! அடியேன் உள்ளத்தின் ஒளியாகி வழி நடத்துகிறார் வள்ளல் பெருமான்!

எமது ஒரே இலட்சியம் எல்லோரும் ஞானம் அறிய வேண்டும்! அடைய வேண்டும்! யாமறிந்த உண்மைகள் அனைத்தும் பரசியம்! அடியேனின் 32 நூற்களில்! உலகம் அறிய வேண்டும்! "கடவுள் உண்மை" துலங்க வேண்டும்! அறிந்தால் அல்லவா அடைவான்!

போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரி தூற்றுவார் தூற்றட்டும் எம்பணி மரணமிலா பெருவாழ்வு நெறியை உலகறியச் செய்வதே! உபதேசம் தீட்சை கொடுத்து மக்களை உயர்வடைய செய்வதே! உள்ளும் புறம்புமாய் எங்குரு வள்ளலார் இருக்க எனக்கென்னக் கவலை?! கன்னியாகுமரி வாலைத்தாய் காத்தருள்கிறாள்!

திருவருட்பிரகாச வள்ளலாரின் 138-வது வருட ஒளியுடலான நன்னாளான 20-01-2011 இன்று தைப்பூச நன்னாளில் கண்மணிமாலை 6-வது பதிப்பு வெளிவருவது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது!

உலகை இரட்சிக்க வந்த நம் ஞானகுரு திருவருட்பிரகாச வள்ளலார் பாதம் பணிவோம்! உண்மை ஞானம் அறிவோம்! உலகமே ஞானம்பெற உழைப்போம்! நாம் தவம் செய்வோம்! தவத்தைப் பற்றி பாரறியச் செய்வோம்! ஞான தானம் செய்வோம்!"எல்லோரையும் கூடவே இருந்து காத்து, முக்தி அடைய வழி காட்டி, விழிவழி ஒளி கூட்டி மரணமிலா பெருவாழ்வு பெற உதவுவார்! சத்தியம்!



என்றும் உண்மையுள்ள
சிவ செல்வராஜ்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

கண்மணி மாலை

இமைகள்

ஆன்மநேய ஒருமைப்பாடுடையீர்!

வந்தனம். கண்ணுக்கு வாசல் கதவுகள் இமைகள் கண்மணி மாலைக்குள் புகுமுன், என் கருத்துக்கு எட்டிய உண்மை விளக்கங்களை நீங்கள் படித்து அறியுமுன், சிறு ஒப்புதல் வாக்குமூலம். இது உலகத்துக்கு!

"கண்ணுதலே நின் அடியார் தமையும் நோக்கேன்
கண்மணிமா லைக் கெனினும் கனிந்து நில்லேன்"

- திருவருட்பா 1371

என திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்களே நமக்காக 150 ஆண்டுகளுக்கு முன்னரே ஒரு கவி பாடி கண்மணி மாலை என்னும் இந்நூலுக்குச் சிறப்பு சேர்த்து விட்டார்கள். இது நாம்பெற்ற பெரும் பாக்கியம். 150 ஆண்டுகளுக்குப் பின் கண்மணி மாலை எனும் இந்நூல் வரும் என அவர் அன்றே அறிந்து வாழ்த்துப்பா அருளியிருக்கிறார் போலும்! திரிகாலமும் உணர்ந்த ஞானியாயிற்றே அவர்! எம்மை இந்த நூல் எழுதத் தூண்டியதும், பெயர் வைத்துக் கொடுத்ததும் அவரே! என்றும் அவர் திருவடியை போற்றுவேன்!

உலகத்துக்கே மனிதன் மனிதனாக வாழும் நெறியை வரைமுறைப்படுத்தி வெளிப்படுத்தியவர்கள் இந்தியர்கள் என்பதில் நாம் மிகவும் பெருமைப்படலாம்! நம் உடலுள் மிளிரும் உயிர் சக்தியை - ஆன்ம சக்தியை உணர்ந்து ஆன்றவிந்தடங்கிய ஆன்றோர், உலகின் அனைத்து மக்களும் ஜாதி, மதம், மொழி, நாடு இன்னும் கற்பிக்கப்பட்ட அனைத்து பேதங்களையும் கடந்து, ஒன்றுபட்டு, ஆன்மநேய ஒருமைப்பாடு உள்ளம் கொண்டு மண்ணில் நல்ல வண்ணம் வாழும் வகையை வெளிப்படுத்திச் சென்றனர். எத்தனை எத்தனை மகான்கள்-ஞானிகள்-சித்தர்கள்-பக்தர்கள் இந்தியாவில்! காலங்காலமாக பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலும் கடவுள் நிலையறிந்து அம்மயமாகி ஏனையோருக்கும் நல்வழி காட்டிய உத்தமர்கள் இப்பாரத புண்ணிய பூமியில் ஏராளம்! ஏராளம்!!

வாழையடி வாழையாக தோன்றிய அந்த ஞானவள்ளல்கள் சொன்ன வற்றை இந்தியர்களாகிய நாம் முழுமையாக அறிந்திருக்கிறோமா? நம்மில் பலர் இந்த மனித தர்மத்தை-சனாதன தர்மத்தை அறியவில்லையே என நினைக்கும்போது மிகுந்த வேதனை ஏற்படுகிறது. ஒப்புயர்வற்ற இஞ்ஞான நெறியை உணர முற்படுவதில் யாதொரு முயற்சியுமில்லாது, வீண்

ஆடம்பரங்களிலும் நம்மை கீழ்நிலைப்படுத்தும் ஆசைகளினாலும் உந்தப்பட்டு வாழ்வாங்கு வாழாமல் வீணே மனம் நொந்து முடிவில் மரணமடைகிறார்கள், உருவத்தில்தான் மனிதன்! செயலில் மிருகம் போல்தான் வாழ்கிறார்கள் என்னும்போது நம் முன்னோர்கள்-ஞானிகள் பட்டபாடெல்லாம் வீணாகி விடுமோ எனப்பயம் ஏற்படுகிறது. ஆனால் வீணாகாது! ஒவ்வொரு காலகட்டத்திலும் இந்தியாவில் எங்காவது ஓரிடத்தில் ஏதாவதொரு மகான் தோன்றி தொய்ந்து போன மனதை ஞான விளக்கத்தால் தூக்கி நிறுத்தி வருகின்றனர். காலங்காலமாக இது நடந்து கொண்டிருக்கின்றது.

நமது ஞானிகள் வெறும் தத்துவத்தை மட்டும் சொல்லிவிட்டுப் போகவில்லை. எந்த வகையிலாவது மனிதன் இறைவனை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே, நம் வாழ்வின் ஒவ்வொரு காலகட்டத்திலும், நிகழ்ச்சியிலும் மறைமுகமாக இறைவனைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். சாஸ்திர சம்பிரதாயங்கள் அனைத்தும் இதனடிப்படையில்தான் உருவானது. அதனால்தான் என்றைக்குமே எல்லோராலும் அர்த்தமுள்ளது இந்து மதம் - இந்த தர்மம் என ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது - ஏற்றும் கொள்கின்றனர். மறைமுகமாக சொன்னதால் ஒரு தீமையும் உண்டானது. சிலர் மறைபொருளை உணராது கதையை மட்டும் அரைகுறையாக படித்து பொருள் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு பட்டிமன்றம்தான் நடத்துகின்றனர். சிலர் சமய சொற்பொழிவு ஆற்றுகிறேன் எனக் கூறுகிறார்கள்! கார் கொண்டுபோய் அழைத்தால்தான் வருவார்கள். தகுந்த கூலி கொடுத்தால்தான் வருவார்கள். கொஞ்சங்கூட பக்தியோ தொண்டுள்ளமோ இல்லாத இம் மேதைகளால் எங்கே வரும் ஆன்மீகம்! மேலும் குருக்கள் என தானே தன்னை சொல்லிக் கொள்பவர் களால் மக்களில் பலர் இன்று மாக்களாகி விட்டது மிகவும் வேதனைக் குரியதே! உண்மை அறிந்த சிலரும் ரகசியம் ரகசியம் என மூடி மறைப்பது மிகவும் பரிதாபத்திற்குரியதே! ஆனாலும் ஆங்காங்கே எத்தனையோ மகான்கள் பல்வேறு ஸ்தாபனங்கள் மூலம் இன்றைக்கும் ஆன்மீக விழிப்புணர்வை மக்களுக்கு ஊட்டி வருவது நாம் மகிழத்தக்க விஷயமாகும். அவர்கள் பணி மென்மேலும் சிறக்கட்டும், இறைவன் அருள் புரிவார். எனவேதான் நான் அறிந்தவற்றை வெளிப்படுத்துகிறேன் மகிழ்வுடன்.

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த பரம்பொருள்! - நம்முள் இருக்கிறது - எப்படி அறிவது? காயத்துள் நின்ற இறைவனைப் பார்க்க - உணர - அடைய நம் பாரத நாட்டின் ஞானிகள் கூறிய இரகசியங்களை வெளிப்படுத்துகிறேன். உடலுக்குள் நுழைய வாசல் "கண்" தான்! **கண்ணைத்தான் ஞானிகள் மெய்ப்பொருள் "திருவடி" என்றும் இன்னும் பற்பல பெயர்களிலும் பரிபாஷையாக கூறியிருக்கிறார்கள்!** கண் மூலமாக எப்படி இறைவனை அடைவது என்ற வழிமுறைகளையும் சொல்லி வைத்துள்ளனர். அவைகளை விரிவாக இந்நூலில் முழுமையாக தந்துள்ளேன். இதுதான் ஒரே வழி! உலகின் எந்தப் பகுதியிலுள்ள ஞானியானாலும் இதைத்தான் சொல்லியிருக்கிறார்கள்! முடிந்த முடிவான நிலை அடைய இதுவே வழி! இதைத்தவிர வேறொன்றுமில்லை? நம்புங்கள். நம்பினார் கெடுவதில்லை

இது நான்கு மறைத் தீர்ப்பு. ஞானிகள் நூற்களைப் படித்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். விளக்கங்களை உள்ளே அறிந்து மனதில் நிறுத்துக! அறிவார் அறிவர்! அறிவால் அறிவர்!

நான் யார்? என்னும் ஆய்விலேதான் நானும் சூரியன் வந்து போவதை பார்த்துக் கொண்டிருக்கிறேன். நாகர்கோவில்-வடிவீஸ்வரம்-உச்சி மாகாளி அம்மன் கோவில் தெருவில் உள்ள கடைசி வீட்டில், திருவாளர் கு. சிவ சுப்பிரமணியம் திருமதி பகவதி அம்மாள் அவர்களின் மூன்றாவது பிள்ளைநான். எனக்கு ஒரு அக்கா, ஒரு அண்ணன், ஒரு தங்கை, ஒரு தம்பி இருக்கிறார்கள். படிப்பதற்கு என்று நானும் கல்லூரிக்குள்ளும் நுழைந்து வந்திருக்கிறேன். சட்டம் போட்டு மாட்ட பட்டம் ஒன்றும் பெறவில்லை. 1961-ல் எனது தந்தையார் தொடங்கிய ஜெயகுமாரி ஸ்டோர்ஸ் புத்தகக் கடையின் ஒரு பகுதியில் தற்போது இருந்து கொண்டு சந்திரன் தேய்ந்து வளர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். 21-03-1956-ல் இந்த உலகத்துக்கு வந்த நான் கால் நூற்றாண்டைக் கடக்கையிலே இறைவன் அருளால் 04-04-1980-ல் திருவடி தீட்சை பெற்றதன் மூலம் மறுபிறவி எடுத்தேன். என்ன புண்ணியம் செய்தேனோ! திருச்சி ஞான சித்தர், ஜோதி இராமசாமி தேசிகர் அவர்களை குருவாகப் பெற்றேன். மெய்ப்பொருள் விளக்கம் உபதேச வாயிலாகப் பெற்றேன். தெளிந்தேன். ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து நடக்க ஆரம்பித்துள்ளேன். நான் அறிந்ததை உலகுக்குணர்த்தவே இக் கண்மணி மாலை வெளியிடுகிறேன். கண் மூலமாக சாதனை புரிந்துதான் இறைவனை அடைய முடியும் என்று இரகசியமாக சொன்னவற்றை வெளிப்படுத்தியிருக்கிறேன்.

கண்மணி மாலை என பெயர் வைக்கக் காரணம் என்னவென்றால், கண்மலர் பற்றி ஞானிகள் பலர் சொன்னவற்றை மாலைபோல் தொகுத்துள்ளமையால்தான்! கண்ணிலே குடியிருந்து கருணைதரும் தெய்வத்தை நான் தெரிந்து கொண்டதைப் போல உலக மக்கள் அனைவரும் தெரிந்து-தெளிந்து ஞான முதிர்ச்சி பெற வேண்டும் என்பதே என் அவா! அடியேனின் இச்சிறு முயற்சியை சற்குரு திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்களின் பொன்னார் திருவடிகளில் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

நன்றி வணக்கம்.

இங்ஙனம்,
ஆன்மீகச் செம்மல் ஞானசற்குரு
சிவ. செல்வராஜ்
தங்க ஜோதி ஞான சபை
சமரச சுத்தசன்மார்க்க சத்திய சங்கம்,
கன்னியாகுமரி


ஹரியும் சிவனும் ஒண்ணு!
அறிந்து உணர்ந்தால் ஞானம்!



சங்கரநாராயணர்



சிவமும் சக்தியும் பாதிப் பாதி!
சிந்தை தெளிந்தாலே ஞானம்!
அர்த்தநாரீஸ்வரர்



அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி
"ஞான தானம் செய்வீர்!"
"ஞான தவம் செய்வீர்!"
இறைவன் திருவடிகளே நம் கண்கள்
வலது கண்
சூரியன்
சிவம்
அ
8
இடது கண்
சந்திரன்
சக்தி
உ
2
உலக குரு திரு அருட்பிரகாச வள்ளலார்
"கண் வழி கட
கடவுளை காண்"
தங்க ஜோதி ஞானசபை
கன்னியாகுமாரி
www.vallalyaar.com
மரணமிலா பெருவாழ்வு பெற வாரீர்!
"கண்மணி அறிந்து" உணர வாரீர்!

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம்
"செந்தமிழ் அருள்நெறிப் பேரவை"

திருமிகு ஞானசத்குரு சிவ செல்வராஜ் அவர்களுக்கு "ஆன்மீகச்செம்மல்" விருது வழங்கி பாராட்டிய உரை!

நாள் : 30-01-2011, இடம் : குமரி மெட்ரிக்பள்ளி - நாகர்கோவில்

உலகில் இதுவரை பரிபாசையாகவும், ரகசியமாகவும் சொல்லி வந்த மெய்ஞ்ஞான விசயங்களை, இவர் பரசியமாக வெளிப்படுத்தி, அருள்மொழிகளை அனைவருக்கும் போதித்து அருள்பாலிக்கும் ஞான அருள்வள்ளல், திருவாசகத்தேன், திருவருட்பாமாலை, கண்மணிமாலை, ஸ்ரீ பகவதியம்மன் அந்தாதி, ஞான மணிமாலை, மந்திர மணிமாலை, சனாதனதர்மம், சாகாக்கல்வி, அகர உகர மாலை போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட ஆன்ம ஞான நூற்களை ஞான தீட்சையில் பெற்று, அதனை அனைவருக்கும் பயன்படும் வகையில் புத்தகங்களாக அச்சிட்டு ஆன்மீக ஞானத்தைப் பரப்பிவரும் ஞான சத்குரு சிவ செல்வராஜ் அவர்களின் பணிகளைக் கண்டு மனம் நெகிழ்ந்து, அவருக்கு பேரவையின் சார்பாக "ஆன்மீகச்செம்மல்" விருது வழங்கி பாராட்டிச் சிறப்பிக்கிறோம்.





பணிவுரை


ஆன்ம நேய ஒருமைப்பாடுடையீர்,

நன்றி. வணக்கம், கண்மணிமாலை 1992-ல் முதல் பதிப்பு வந்தது. இது ஏழாவது பதிப்பு! திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளால் வருகிறது! நந்தன வருடம் புரட்டாசி மாதம் சித்திரை நட்சத்திரத்தன்று 15-10-2012-ல் நமது வள்ளல் பெருமானின் 190-வது திருஅவதார தினத்தன்று - குரு பூஜையன்று கன்னியாகுமரி தங்கஜோதி ஞான சபையில் வைத்து வெளியிடப்படுகிறது! வள்ளல் பெருமான் அருளால் இன்று 37-வது நூலாக "வாலை கன்னி 'ய' குமரி - ஞானம் பெற விழி," 38-வது நூலாக "ஜீவகாருண்யம்," 39-வது நூலாக "மூவர் உணர்ந்த முக்கண்" ஆகிய மூன்று மெய்ஞ்ஞான நூற்களும் வெளியிடப்படுகிறது! எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

இவண்

ஆன்மீகச்செம்மல், ஞானசத்குரு சிவசெல்வராஜ்
தங்கஜோதி ஞான சபை

கண்மணி மாலையில் உள்ள மலர்கள்




குருவும் சீடர் குடும்பமும்

ஞானசித்தர் ஜோதி இராமசாமி தேசிகர்



ஞானசற்குரு சிவசெல்வராஜ் குடும்பம்



கண்மலர் ஒன்று

இறைவன் ஒருவரே

எல்லாம் வல்ல இறைவன் ஒருவர் உள்ளார். நாம் பார்க்கின்ற இவ்வுலகம்-பிரபஞ்சம் அனைத்தையும் படைத்து இயக்கிக் கொண்டிருக்கின்ற அம்மாபெரும் சக்தியே பரம்பொருள். எல்லாவற்றிற்கும் மூலம்-எல்லாம் வல்ல ஆண்டவர் என ஞானிகள் இயம்பியுள்ளனர். உலகின் எப்பகுதியிலுள்ளவரும் ஏதாவது ஒரு பெயரை, ஏதாவதொரு மொழியில் தத்தம் அனுபவத்திற்கேற்றவாறு எல்லாம் வல்ல அந்த ஆண்டவரைப் பற்றியே கூறியுள்ளனர். இதை யாரும் மறுக்க முடியாது! ஓர் உருவம் ஒரு நாமம் இல்லாத அந்த இறைவனை ஆயிரம் திருநாமம் பாடி அவரவர் எண்ணப்படி கண்டு-போற்றி-வழிபட்டு அடைந்தனர். எந்தப் பெயரைச் சொல்லி எப்படி வழிபட்டால் என்ன? எல்லாம் அந்த மாபெரும் சக்தியைத்தானே குறிக்கிறது. இதில் உயர்ந்தது தாழ்ந்தது என்பதெல்லாம் அறியாமையாகும்.

உலகத்திற்கு ஞானிகளாக-அவதார புருஷர்களாக-சித்தர்களாக-மகான்களாக உள்ள அனைவரது கூற்றையும் கூர்ந்து கவனித்தால், அனைவரும் எல்லாம் வல்ல ஆண்டவரை-சக்தியை-பிரம்மத்தை-பரம்பொருளை ஒளியாகவே சொல்லியிருப்பதை நாம் உணரலாம்! இதற்கு உதாரணம் சொல்வதானால் நிறையச் சொல்லலாம். அனைவரும் அறிந்த பல நூற்களிலும் பலராலும் சொல்லப்பட்டவைகளை நாமே சொல்வதைவிட நீங்களே பார்த்து உணர்வதே சிறப்பு.

நீங்கள் கண்ணுற சிலவற்றை இங்கே மாலையாக்கித் தருகிறேன். 'பாரப்பா பலவேத நூலும் பாரு' என குறுமுனி அகத்தியர் சொன்னதின் காரணம் நாம் ஒவ்வொருவரும் தேடி-ஆராய்ந்து-அறிந்து-தெளிவுபட வேண்டும்-அனுபவப்பட வேண்டும் என்பதற்காகத்தான்! அப்படி முயலும் போதுதான், எல்லோரும் "ஒன்றை" பற்றித்தானே சொல்கிறார்கள் என்ற தெளிவு பிறக்கும். அதன்பின் அந்த ஒன்றைப் பற்றுவதற்கான வழிமுறையை அறிய முற்படுவான். தேடினால்தானே கண்டுகொள்வான்? உள்ளே தேடினால்தானே - கண்டு கொள்வான்! கண்ணால் பார்த்துத்தானே படிக்கிறோம்? அந்த 'ஒன்று' கண்தான் என உணருகிறோமா? இல்லையே? கண்ணிலேதான் அந்த பரம்பொருள் ஜீவனாய்-ஒளியாய் நின்றிலங்குகிறான் என்பதை உணர வேண்டும்! "கற்றுமே காணாததை கண்டு தெளிந்திடு நீ" என சித்தர்கள்

கூறுவார்கள். கண்தானே பார்த்து படிக்கின்றது. அந்தக் கண்ணில்தான் - கண் மூலம்தான் ஞானம் அடைய வேண்டும் என்பதை அறியாமலிருக்கின்றதை நீ அறிந்து தெளிவாயாக எனக் கூறுகிறார்கள்.

இந்த இரகசியத்தை யாராவது சுட்டிக் காட்டினால்தான் நமக்குப் புரிய முடியும். அதனால்தான் "சுட்டிக்காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது" என்ற பழமொழி நிலவுகிறது. பற்பல நூற்களையும் ஞானவான்கள் கூற்றையும் படிக்கும்போது பரம்பொருள் - ஒளி - கண் - என நினைத்துப் பாருங்கள் - படியுங்கள் - உண்மை விளக்கங்கள் அழகாக புரியும்! சிந்தியுங்கள் தெளிவு கிடைக்கும். பரம்பொருள் ஒளியாக-கண்ணில் காரியப்படுவதை நாம் உணர்வதுதான் ஞானத்தின் முதல்படி. திருவடி தீட்சை என்றும் சட்சு தீட்சை என்றும் இதைத்தான் குரு உபதேசம் செய்வார். உபதேசம் என்பதன் பொருள், உப-இரண்டு, தேசம்-இடம் இரண்டு இடம் - இரண்டு கண் என்பதே ஆகும். இதை உறுதிப்படுத்தத்தான் சாஸ்திர விளக்கம் கூறுவர். அவரும் இதைத்தான் சொன்னார் - இவரும் இதைத்தான் சொன்னார் - எல்லோருமே இதைத் தான் சொன்னார்கள் என எல்லா ஞானிகள் நூற்களையும், அவற்றின் மறை பொருள்களையும் - பரிபாஷையாக சொன்னவைகளை விளக்கித் தெளிவுபடுத்துவர். இந்த உபதேசத்தை ஒரு சடங்காகவே செய்வர். உபதேசம் பெற்றவன் அஞ்ஞான வாழ்க்கையை முடித்து ஞான வாழ்வுக்கு முயலுபவனாக மீண்டும் பிறந்தவனாக கருதப்படுகிறான். மெய்ப் பொருள் உணர்ந்த உபதேசம் பெற்றவர்களே இரு பிறப்பாளன் ஆகிறான்.

உபதேசம் பெற்ற ஆத்ம சாதகனுக்கு நான் யார்? என்பதை அறிய முற்படுபவனுக்கு முதலில் தேவை நம்பிக்கை. அதை ஊட்டுபவர்தான் உண்மை குரு. எதை நம்ப வேண்டும்? ஏன் நம்ப வேண்டும்? நாம் ஒவ்வொருவரும் இவ்வுலகில் மனிதனாக உடல்கொண்டு பிறந்திருக்கின்றோம்! நமக்கு உடலை தந்தது நம் தாய் தந்தையர். இந்த உடலுக்குள் நின்று நம்மை இயக்குபவர் யார்? அந்த சக்தி எது? நாம் அறிய வேண்டாமா? பல வருடங்களாக வளர்கிறோம். ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக்கு பின் அங்கே பக்குவம் அடைகிறோம் எதற்கு? நாமும் ஒரு குழந்தையைப் பெறுவதற்குத்தான்! பின் அதற்கான முயற்சி அதை காப்பாற்ற முயற்சி. நாம் பக்குவப்பட்டதைப் போலவே அதுவும் பக்குவப்படுகிறது. அதுவும் நம்மைப் போல வாழ்க்கையை தொடருகிறது. இப்படியே இந்த உலகம் முழுவதும் நடக்கிறது. ஒரு சராசரி மனிதன் இதோடு தன் வாழ்க்கையை முடித்துக் கொள்கிறான். அவன் எங்கே முடித்துக் கொள்கிறான்? அது தானாகவே முடிந்து விடுகிறது. இவன் ஆசை அபிலாசைகள் எதுவும் நிறைவேறுவதில்லை. ஏதேதோ ஆசைப்படுகிறான் என்னென்னவோ நடக்கிறது! எப்படியோ சாகிறான். இதுதான் நாம் அன்றாடம் காணும் மனித வாழ்க்கை.

இந்தப்படியே பிறந்து வளர்ந்து வாழ்ந்து சாகிறவர்கள் எண்ணிறந்த கோடி. இதிலே கோடியில் ஒருவரே வாழ்வாங்கு வாழ்கிறார். மற்றவர்களையும் வாழ வழி காட்டுகிறார். மரணமிலா பெருவாழ்வு அடைகின்றனர். நாமும் ஏன் இந்த கோடியில் ஒருவராக வாழக்கூடாது? நாம் ஏன் அதற்கான முயற்சிகளில் ஈடுபடக்கூடாது? எப்படியோ பிறந்து விட்டோம். சாகத்தான் வேண்டுமா? இன்ப மயமாக வாழ்வது எப்படி? சாகாமலிருக்க யாது வழி? என நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். முதலில் நமக்கெல்லாம் அப்பாற்பட்ட மாபெரும் சக்தி ஒன்று - இறைவன் - ஒருவர் உண்டு என்று நம்ப வேண்டும். அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கின்ற அந்த மேலான - உயர்ந்த மாபெரும் சக்தியின் ஒரு சிறு அணு அளவு மாத்திரமே நம் ஜீவன். அது ஒளியாக நம் கண்களில் உள்ளது. அந்த பரம்பொருளின் ஒரு சிறு பகுதிதானே நம் ஆத்மா? அந்த பரமாத்மாவின் ஒரு பகுதிதானே இந்த ஜீவாத்மா? அப்படியானால் நாமும் இறைவனின் ஓர் அம்சம்தானே! அந்த இறைவனின் சக்தி நமக்கும் உண்டல்லவா? இறைவன் கடல் என்றால் நாம் ஒருதுளி நீர். இறைவன் அளவு நாம் இல்லையென்றாலும் இறைவன் தன்மை நம்மிடம் உண்டு. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கொப்ப, அளவில் சிறிதான ஜீவ ஆத்மாவை உணர்ந்தால் அந்த மாபெரும் பரமாத்மாவை அறிந்தவராவோம். "தன்னை உணர்ந்தவன்தான் தலைவனை அறிவான்". இவையெல்லாம் நமது முன்னோர்கள் ஞானிகள் கூறியவை. அவர்கள் கூற்றை முழுமையாக நம்பி, பின் அவர்கள் உணர்த்தும் வாழ்க்கை நெறி வழி நடந்தால் நாமும் அவர்களைப் போல மரணமிலா பெருவாழ்வு அடையலாம்.

"பரம்பொருள்" இறைவனைப்பற்றிக் கூறுவதில் உலகர் அனைவரும் ஒன்றுபட்டு விடுகின்றனர். எப்படியெனில் உலகம் முழுவதிலுமுள்ள அனைவரும் ஒளி ஒன்றையே ஒப்புக் கொள்கின்றனர். அது போதும் நமக்கு. சென்ற நூற்றாண்டில் வடலூரில் உலாவந்த திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இறைநிலையை நம்போன்ற பாமரனும் புரிந்து கொள்ளும்படி அழகாக தெளிவாக அருட் பெருஞ்ஜோதி என்று அருளியிருக்கிறார்கள். அவன் தனிப் பெருங்கருணை மயமானவன் என பறைசாற்றினார்கள். அருள் மயமான பெரிய ஜோதியாகிய இறைவன் தனித்த பெரிய கருணை வடிவினன் என தன்னுள் கண்டு உணர்ந்ததை, நாமும் மேலான சாயுச்சிய நிலை - மரணமிலா பெருவாழ்வு நிலையடைய வேண்டும் என்று இரக்க உள்ளம் கொண்டு உரைத்தார்கள். இறைவனை சுட்டும் மந்திரம் - அடைய வழி காட்டும் மந்திரமாகிய

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி

என்ற மகாமந்திர வாக்கியத்தை நமக்கு அருளினார்கள். எல்லோராலும் மறைத்துச் சொல்லப்பட்ட இரகசியங்களை இறைவன் தன்மையை எல்லோரும் அடைய வேண்டும் என்று கருதி, கொடுக்கக் கொடுக்க பெருகும் ஞானத்தை மக்களெல்லோருக்கும் வாரி வாரி வழங்கி அதனால் திரு அருள்பிரகாச வள்ளல் என மக்களால் போற்றிப் பாராட்டப்பட்டார்கள்.

இப்படி எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஜோதியை பரம்பொருளை - பெரும் ஜோதியை - பரமாத்மாவின் அணுப்பிரமாணமான ஜீவாத்மாவினால், அது நம் கண்ணாகிய சிற்றம்பலத்தில் ஒளியாக ஆடிக்கொண்டிருக்கும் விதம் அறிந்து பரம்பொருளே நம் கண்ணில் ஜீவனாய், ஒளியாய், உள்ளதை உணர்ந்து பரமாத்மாவாகிய பெருஞ்ஜோதியை சிறு ஜோதியாகிய - நம் கண்ணில் ஒளியாக உள்ள - ஜீவன் கொண்டு அடைய முயல வேண்டும். அப்படித்தான் அடைய முடியும்! இதல்லாமல் பெருஞ்ஜோதியை அடைய காற்று கொண்டு போனால் முடியுமா? நீர் கொண்டு போனால் முடியுமா? பெருஞ்ஜோதியை சிறு ஜோதி மூலமாகத்தான் நெருங்க முடியும். அனுபவம் கூறும் உண்மை அதுதானே? எல்லா ஞானிகள் கூற்றும் அதுதானே?

ஜோதியானது சுயமானது. அதுவே பரந்துள்ளது. அதுவே அருள் மயமானது. அதுவே மூலம் - பூரணம் - சிவம் - ஒளி - மங்களம் - இறைவன் - பரம்பொருள் - எல்லாம் அவனே! அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தவன். எங்கும் இருப்பானானால் நம் உடலிலும் இருக்க வேண்டுமல்லவா? ஆம், இருக்கிறான். நம் உடலில் கண்ணில் - ஒளியாக ஜீவனாய் உள்ளான்.

திவ்ய ஆத்ம சொரூபிகளே, பரம்பொருள் பற்றி பேசுங்கள் - சிந்தியுங்கள் - படியுங்கள் - பாடுங்கள். அதுவே நீங்கள் கடைத்தேற வழியாகும். பரம்பொருளின் பெரும் புகழை பேசுபவரோடு மட்டுமே தொடர்புகொள். அதுதான் நல்ல சத்சங்கம். பரம்பொருளின் தன்மையைப் பற்றி தனிமையில் சிந்தியுங்கள். பரம்பொருளின் திருவிளையாடல்களை அனுபவித்த ஞானியரது நூற்களைப் படியுங்கள். பரம்பொருளின் பெருமையை - ஜீவாத்மாக்களை ஆட்கொள்ளும் பாங்கைப்பற்றி பாடுங்கள். உங்கள் மனதோடு கேட்பவர் உள்ளமும் உருகும். இவையெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாக நம்மை நாமே பக்குவப்படுத்திக் கொள்ளும் முறை.

இரவில் தீபமில்லாத இடத்தில் இருக்க வேண்டாம். அது பிராண நஷ்டம் உண்டுபண்ணும் என பெரியோர் கூறுவர். ஒவ்வொரு இல்லத்திலும் காலை மாலை இருவேளையும் விளக்கேற்றி வழிபடும்

வழக்கம் இந்துக்களுடையது. வீட்டை சுத்தப்படுத்தி தானும் சுத்தமாகி இருவேளையாவது இறைவனை நினைத்து தியானம் பூசை செய்து வழிபடுகிறார்கள். அதன் மூலம் வீடும், உடலும் சுத்தமடையும். புற இருளை நீக்க வெளியே விளக்கேற்றி இருளைப் போக்கி இன்பமடைகிறோம். அதுபோல் நம் கண்ணில் ஒளியேற்றி உணர்வு ஏற்றி அக இருளை நீக்கி பேரின்பம் அடைய வேண்டும். ஞானிகள் கூற்று ஒவ்வொன்றும் இகத்துக்கும் பரத்திற்கும் பொருந்தியே இருக்கும். அண்டத்தில் உள்ளது அனைத்தும் பிண்டத்தில், உலகத்தில் உள்ளது நம் உடலிலும் உள்ளது. சூரியன் சந்திரன் இன்னும் பிறவும் இவ்வாறே. நமது இடது கண் சந்திரன், வலது கண் சூரியன், இது ஞானிகள் கூற்றாகும்.

பைபிளில், கண்ணே சரீரத்தின் விளக்காய் உள்ளது. உன் கண் ஒளியுள்ளதாய் இருந்தால் உன் சரீரமும் ஒளி உள்ளதாய் இருக்கும். தேவன் ஒளியாய் இருக்கிறார். நீங்களும் ஒளியிலே நடந்தால் தேவனை தரிசிக்கலாம். உன் சரீரத்தின் விளக்கான கண்ணில் உள்ள தேவனாகிய ஒளியை பெருக்கி உன் சரீரத்தை ஒளிமயமாக்கினால் ஒளிமயமான தேவனை தரிசிக்கலாம் என கூறப்பட்டுள்ளதை சிந்திப்பீர்களாக! குர்ஆனிலும் இன்னும் உலகில் உள்ள அனைத்து மத புனித நூற்களிலும் இதையேதான் கூறியிருக்கின்றனர். படித்து, சிந்தித்து தெளிவடையுங்கள்.

ஞானி குணங்குடி மஸ்தான் ஒரு பாடலில் முட்டை பொரிப்பேன் முழுக்கோழி பொரிப்பேன் என்று கூறுகிறார். அன்பால் இறைநிலையை அடையும் ஞானி ஒருவர் இப்படி உயிர்க்கொலை புரியும் செயலையா பாடுவார்? சிந்தியுங்கள். முட்டை போன்ற வடிவுடைய கண்ணில் உள்ள ஒளியை பெருகச் செய்து பொரிப்பேன் - நெற்றிக்கண் ஆக்குவேன் என்றும் கண்ணிலே பரவும் ஒளி உடல் முழுவதும் பரவி வியாபித்து முழு உடலும் ஒளி மயமாகி ஞான முதிர்ச்சியடைவதையே முழுக்கோழி பொரிப்பேன் என்றும் கூறுகிறார். சிந்தித்து, சிந்தித்து தெளிவடையுங்கள்.

இப்படியே எல்லோராலும் மனித தேகத்தில் கண்ணில் பரம்பொருள் ஒளியாக உள்ளான் என உணரப்பட்டுள்ளதை, உரைக்கப்பட்டதை நாம் அறிந்தால் அது நம் பாக்கியம். இரை தேட எடுக்கும் முயற்சியில் சிறிது நேரமாவது இறையை தேடுவதற்கு முயற்சி செய்.

அருட்குரு நாராயண குரு அவர்கள் மதம் எதுவாயினும் மனிதன் நன்றாக ஆனால் சரி என்பதையே தன் பக்தர்களுக்கு உபதேசித்தார்கள். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதனையும் எப்போதும் உபதேசித்து வந்தார். இறைவனை நாம் அடைவதற்கு ஜாதி மதப் பிரிவினைகளே தடைக்கல் என்றும் இவைகளை உடைத்து அப்புறப்படுத்தினால்

ஆண்டவனை அடையலாம் எனவும் கூறினார்கள். சன்மார்க்க வழி நடந்த மகான் அருட்திரு நாராயண குரு அடிகள் போன்று எம்மதமும் சம்மதமே. கடவுள் ஒருவரே என்னும் பெரியோர்களே இன்றைய உலகிற்கு தேவை. வர்க்கலை என்னும் ஊரில் கேரளாவில் அம்மகானின் சமாதி உள்ளது. பெரிய ஆசிரமமும் இயங்கி வருகிறது. நாம் போற்றி வணங்க வேண்டிய மகான்களுள் நாராயண குரு அடிகளும் ஒருவர் ஆவார்.

❁ ❁ ❁ ❁ ❁



ஜோதி குருஞான சபை, ஆரல்வாய்மொழி

கண்மலர் இரண்டு

இரண்டு குரு

எல்லாம் வல்ல ஆண்டவர் ஒருவரே என்று யார் நமக்கு உணரச் செய்கிறாரோ - கிடைத்ததற்கு அரிதான இம் மானிடப் பிறவியிலேயே அடைதற்கு அரிதான மேலான பேரின்ப பெருநிலைக்கு செல்ல யார் வழி காட்டுகிறாரோ - இவ்வுலக வாழ்க்கையை நமக்கு அறிவித்து வாழ்வாங்கு வாழ வாழ்க்கை நெறியை யார் உபதேசிக்கிறார்களோ - இறைவன் இத்தன்மையன், நீ இத்தன்மையன் - நீ எப்படி அதுவாக வேண்டும் என உரைக்கிறாரோ அவர்தான் குரு. குருவாக ஒருவர் வந்துதான் சொல்ல வேண்டும் என்பதல்ல. பல ஞானிகளின் நூற்களை படிக்கும்போது அந்நூலே குருவாகி விடலாம். அந்நூலாசிரியரே மானசீக குரு ஆகலாம். ஏதாவதொரு இயற்கை தூண்டுதல் நமக்கு குருவாகலாம். நூற்களோ, இயற்கையோ, மனிதனோ எப்படியாயினும் சுட்டிக் காட்டிவிட ஒரு குரு தேவை. அவரவர் நிலைக்குத் தக்கபடி அமையும். மெய்ப்பொருள் உணர்ந்த ஒருவரை குருவாக ஏற்றுக் கொள்வதே சாலச்சிறந்தது. "குருவில்லா வித்தைபாழ்" என்ற முதுமொழியை கவனத்தில் கொள்க.

நாம் பிறந்ததிலிருந்து நமக்கு ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு குரு உண்டு. முதலில் தாய், இதுதான் தந்தை எனச் சுட்டிக் காட்டுகிறார். தந்தை நாம் கல்விகற்க பள்ளியைச் சுட்டிக் காட்டுகிறார். அரிச்சுவடியை சுட்டிக் காட்டுகிறார் ஒருவர். படிப்படியாக பல பாடங்களை சுட்டிக் காட்டுகிறார்கள் பலர். நம் நண்பர்கள், சகோதர சகோதரிகள், உறவினர்கள் ஒவ்வொருவரும் அவரவர் அனுபவங்களை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றனர். நமக்கு வாகனங்கள் ஓட்ட ஒருவர் பயிற்றுவிக்கிறார். இப்படி பலபலவும் பற்பலராலும் சுட்டிக் காட்டப்பட்டு உணர்ந்து வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறோம். இதெல்லாம் உலக வாழ்க்கையில் நாம் சந்திக்கும் மாற்றங்களுக்கு வழி காட்டுபவை. தீய பழக்க வழக்கமுடையவனோடு சேர்ந்தால் அவன் சுட்டிக்காட்டும் தீயவாழ்க்கையில் தன்னை இழப்போர் நல்ல மனிதனாக முடியாது. இவர்களெல்லாம் குரு அல்ல. மனிதன்-மனிதனாக வாழ வழி காட்டுபவரே உண்மையான குரு. "இறைவனோடு ஐக்கியமாக விழியாகிய வழியை சுட்டிக் காட்டுபவரே உண்மை குரு". அந்த உண்மை குருவை ஒவ்வொருவரும் பெற்றாக வேண்டும். மாதா-பிதா-குரு-தெய்வம் இதுதான் முன்னோர்களால் வரிசைபடுத்தப்பட்டுள்ளது. மாதா பிதாவை எல்லோரும்

கூறியும் திருவருட்பாவை பழித்தும் பலவாறாக பேசினர். சைவ சித்தாந்தம்தான் உயர்ந்தது என்று அறிவிலிகள் அகங்காரத்தில் கொக்கரித்தனர். அப்போது நமது கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த செய்குதம்பி பாவலர் என்னும் ஒரு முஸ்லீம், திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் அருமை பெருமைகளையும், ஒப்புயர்வற்ற ஒரு ஞானி அவர் என்பதனையும், திருவருட்பா அனைத்தும் இறைவன் அருளால் வள்ளலார் பாடிய அருள்பாக்கள்தான் என்றும் தக்க ஆதாரங்களுடன் எடுத்தியம்பினார்.

இந்தியாவில் - தமிழகத்தில் பிறந்த - ஒளியுடல் பெற்று மரணமிலா பெருவாழ்வு பெற்ற ஒரு மகானை - உத்தம புருஷரை இந்துக்கள் சைவர்கள் என்று கூறி அலையும் இதே தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களே பழித்தனர் என்றால் இவர்களின் அறியாமையை என்னென்றுரைப்பது? ஆனால் வேறு மதத்தில் பிறந்த ஒருவர் வள்ளலாரை போற்றிப் புகழ்ந்தாரென்றால் அவரின் அறிவுத்திறன் எவ்வளவு உயர்ந்தது பார்த்தீர்களா? சதாவதானி செய்குத்தம்பி பாவலர் அவர்கள் பல்வேறு கூட்டங்களில் எதிர்த்து பேசியவர்களின் கொட்டத்தை அடக்கி, திருவருட்பாவின் மகிமையை - அருள் திறத்தை உலகறியச் செய்தார்கள்.

வள்ளல் பெருமானை அறிந்து கொள்வதற்கே - திருவருட்பாவை படித்து உணர்வதற்கே ஞானம் வேண்டும்!

செய்குத்தம்பி பாவலர் பிறந்த ஊரில் நானும் பிறந்திருக்கிறேன் என்று எண்ணும்போதே பேரானந்தப்படுகிறேன். வாழ்க அவர்தம் புகழ்!

ஒப்புயர்வற்ற திருவருட் பிரகாச வள்ளல் இராமலிங்க சுவாமிகள் அவர்களையே சற்குருவாக - வணக்கத்திற்குரிய ஞானியாக - பின்பற்றுவதற்குகந்த மாபெரும் சித்தராக - தான் சொன்னபடி வாழ்ந்துகாட்டி மரணமிலா பெருவாழ்வு பெற்று ஒளியுடல் பெற்று இறை நேச செல்வராக விளங்கியவரை நாம் முழுமனதோடு ஏற்றுக்கொண்டு அவர்காட்டும் பாதையில் நடந்தால் நாமும் பெறலாம் மரணமிலா பெருவாழ்வு! இது சத்தியம்.

கண்மலர் மூன்று

முச்சுடர்

எல்லாம் வல்லவர் - எல்லாவற்றுக்கும் மூலம் - எங்கும் நிறைந்தவர் - பரம்பொருள் - பரமாத்மா - எல்லாவற்றிற்கும் மேலான அந்த மாபெரும் சக்தியை உணர்ந்த அனைத்து பெரியோர்களும் உலகர் மீது கொண்ட அன்பால் அந்த மாபெரும் சக்தியை அது காரியப்படும் விதத்தை, அதன் தன்மையை வெளிப்படுத்திச் சென்றுள்ளனர். என்றென்றும் சிரஞ்சீவியாக வாழ்கின்றனர். இதற்கு உதாரணமாக, திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் தான் உடலோடு ஜோதியாகி தன்னை மறைத்துக் கொள்ளுமுன் மேட்டுக்குப்பம் சித்திவளாக திரு மாளிகை புறத்தே அன்பர்களுக்கு கடைசியாக கொடுத்த உபதேசம் அத்தாட்சியாக உள்ளது. "ஆன்மநேய ஒருமைப்பாட்டுடைய மெய்யன்பர்களே ஞானசரியையில் சொல்லியபடி தெய்வ பாவனையை தீபத்தில் ஏற்றிச் செயல்படுங்கள். இறைவன் அருள்வார் எனக் கூறித் தம் கையால் ஒரு ஜோதி ஏற்றி அன்பர்களிடம் கொடுத்து இதை தடைபடாது ஆராதியுங்கள் நலமடைவீர்கள் என்றருளினார்கள். அது இன்றளவும் அணையா தீபமாக சுடர்விட்டுப் பிரகாசித்து, வரும் அன்பர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறது. மேலும் அப்போது இம்மாளிகையின் உள்ளே செல்வோம் - வெளியே திருக்காப்பிட்டுக் கொள்க - திறக்காதீர்கள் - பின்னாளில் அரசாங்க அதிகாரிகள் திறப்பார்கள். எல்லாம் வல்ல அருட் பெருஞ்ஜோதி ஆண்டவர் எம்மை அவர்களுக்குக் காட்டிக் கொடுக்க மாட்டார். நாம் இனி எல்லார் உள்ளத்திலும் புகுந்து கொள்வோம் என்று கூறி அருளினார்கள். அதன்படியே சில நாட்களில் அதிகாரிகள் திறந்து பார்க்க அங்கு யாருமில்லாமல் அவ்வறை முழுவதும் ஒரே ஜோதி மயமாய் இருக்கக் கண்டனர். வள்ளலார் இப்போது நம் எல்லோரிடமும் நிறைந்து இருக்கிறார். சிரஞ்சீவியான அம்மகான் நமக்கு ஜோதியை வழிபடவும், திருவருட்பா ஞானசரியை பாடல்பாடி செயல்படவும் உபதேசித்துள்ளார்கள்.

எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது ஜோதியே. அந்த மாபெரும் ஜோதியை அடைய சிறு ஜோதியாகிய ஜீவன் கொண்டு முயல்வதே அறிவுடையார் செய்கையாகும்! நம்முள் ஜீவனாயுள்ள சிறு ஜோதியை நாம் எப்படி அடைவது? திருவருட் பிரகாச வள்ளலார் தன் சிறு வயதில் எப்படி தியானம் செய்தார் என்பதை பார்ப்போமா? ஒரு தனியறையில் சுவரில் நிலைக் கண்ணாடியை வைத்து அதன் முன்னால் ஒரு குத்து

உலகமில்லை. எனவே எப்போதும் சூரிய கலையாகிய வலது கண்ணிலேயே உணர்வோடு இருங்கள்! ஒளியை பெருக்கி மாயையாகிய இருளை நீக்குங்கள் - அறியாமையாகிய இருட்டை நீக்குங்கள். ஒளி பெருக பெருக உங்கள் உடல் சுத்த தேகமாகும். ஊன உடலே ஒளியுடலாகும். மரணமிலா பெருவாழ்வு அடையலாம்.

அபிராமி பட்டர் அருளிய அபிராமி அந்தாதி முதல்பாடல் பின்வருமாறு : உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர் என ஆரம்பிக்கின்றார். உதிக்கின்ற செங்கதிர் நமது வலது கண்ணில் செங்கதிரோன் ஆகிய சூரியன் உதிக்கின்றது. உச்சித் திலகம் - கண்ணின் மத்தியிலுள்ள கண்மணி - திலகம் போல் வட்டமாக உள்ளதல்லவா அதுவே உச்சித் திலகம். உணர்வுடையோர் - அதில் உணர்வுடைய சாதனையாளர்கள். அதாவது திலகம் போன்ற கண்மணியில் வலது கண்ணில் உச்சியில் உணர்வுடையவர்கள் எனப்பொருள். ஞானிகள் இறை உணர்வு பெறுவதற்கு வழி இதுவே என கூறுகின்றனர். அறிந்து கொள்க. மேலும் அபிராமி பட்டர், மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப் பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே பணியேன் ஒருவரை நின் பத்ம பாதம் பணிந்த பின்னே என்றும் கூறுகிறார். கண்மணியே - அம்மணியின் ஒளியே, ஒளிவிடும் மணி புனைந்த கண்ணே கண்ணுக்கு அழகான ஒளியே - உன்னை அணுகாதவர்களுக்கு மரணமாகிய பிணியே - மரணமாகிய பிணிக்கு ஒளியாகிய நீயே மருந்து - தேவர்களின் பெருவிருந்தே - உன் தாமரை திருவடியை கண்களில் கண்டு பணிந்தபின்னர் வேறு ஒருவரையும் பணியமாட்டேன் எனக் கூறுகிறார்.

இப்படி எல்லா ஞானிகளும் கண்ணில் - மணியில் - ஒளியைக்கண்டு போற்றி மேனிலை அடைந்தனர். ஜோதியே ஆதி நாம் அதை உணர்தலே மேன்மை. முச்சுடரையும் ஒன்றாக்கி உச்சித் திலக உணர்வுடையோராகத் திகழ்வோமாக.



கண்மலர் நான்கு


நான்கு நிலைகள்

நமது ஞானிகள் மனிதன் இறைநிலையை அடைய நான்குபடி நிலைகளை உருவாக்கித் தந்துள்ளனர். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும். உலகர் மீது அவர்கள் கொண்ட கருணை அளவிட முடியாதது! நாமெல்லாம் உயர்நிலை அடைய வழிகாட்டிச் சென்றுள்ளனர். சரியை என்பது அங்கம் துலக்கி ஆலயம் தொழுவது. முதல் நிலையில் மனிதன் அதிகாலையில் சூரியோதயத்திற்கு முன் எழுந்து குளித்து தூய உடை அணிந்து கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபடுதலேயாகும். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எனவும் சான்றோர் கூறினார்கள். இதை நாம் சிந்தித்துப் பார்ப்போமேயானால் உண்மை புரியும். கோயில் வழிபாடு முதல் வகுப்புப் பாடம் குழந்தைகளுக்கு அரிச்சுவடி கற்றுக்கொடுப்பது போல இறைவனைப் பற்றி அறியாத குழந்தைகளுக்கு - மனிதர்களுக்கு, பெரியோர்கள் இறைவனை அடைய முதல்படியாக உருவ வழிபாடு அமைத்துக் கொடுத்தனர். புராணங்களும் ஏற்படுத்தினர். திருவிழாக்கள் நடத்தினர். இதில் நாம் பெருமைப்பட வேண்டியது என்னவென்றால் அவர்கள் கற்பித்த ஒவ்வொன்றும் தத்துவம் உள்ளதே! கோயில் கட்டியதிலேயே மனித உடலமைப்பைக் காட்டினர். தெய்வ திரு உருவங்களிலே புராணக் கதைகளிலே - தத்துவம் - ஞானம் வெளிப்படச் செய்தனர். மனிதன் சமுதாயத்தில் வாழ நல்ல நெறிமுறைகளை வகுத்துக் கொடுத்தனர். எதை எடுத்தாலும் ஞானப் பொருள் விளக்கமே புரிந்துள்ளனர். என்னே! அவர்கள் அறிவுத்திறன்!

மனிதன் வளர வளர கோயிலுக்குச் சென்று வழிபடுவதைவிட் இன்னும் கடவுளிடம் நெருங்கும் ஆவல் வளருகிறது. அதுவரை கோயிலில் இறைவனுக்கும் பக்தனுக்கும் இடையில் பூசாரி என்று ஒருவர் இருந்தார். பக்தனின் முதிர்ச்சி நிலை-தானே பூஜை செய்ய வேண்டும், தானே பாட வேண்டும், தானே சேவை செய்ய வேண்டும் என மனது துடிக்கிறது. வீட்டில் அதற்காக அவன் இஷ்டப்பட்ட கடவுள் வடிவம் வாங்கி வைத்து அவன் மனம் விரும்பும்படியெல்லாம் பூஜை செய்து மகிழ்கிறான். தோத்திரம் பாடி மகிழ்கிறான். இறைவனுக்கும் அவனுக்கும் இடையில் வேறு ஒருவர் வருவதை அவன் விரும்புவதில்லை. முதல் நிலையில் ஊர் ஊராக பல புண்ணிய நதிகளில் நீராடி பல கோயில்களுக்கு சென்று வழிபட்டு வந்த பக்தன் இரண்டாம் நிலையில்

இருக்கும் - ஒத்து இருக்கும் இரு கண்மணியைப்பற்றி யார் ஒருவர் அறிகிறாரோ - அதில் ஜீவன் இருக்கும் பாங்கினை யார் உணருகிறாரோ - அந்த ஜீவன் கொண்டுதான் பரமாத்மாவை அடைய முடியுமென்று அறிந்து சாதிக்கிறார்களோ அவர்கள்தான் உயிர் பிரியாமல் என்றும் நீடித்த தேகத்துடன் மரணமிலா பெருவாழ்வு வாழ்வர் என திருவள்ளுவர் இயம்புகிறார். இதை அறியாதவர்கள் சாதிக்காதவர்கள் செத்துப் போவார்கள் என்றும் உறுதியாக கூறுகிறார்கள். நாமும் உணர்ந்து மரணத்தை வெல்வோம்.

நம்மில் பலருக்கும் நமக்கு இதெல்லாம் சாதிக்க முடியாது! நம்மால் எப்படி முடியும்? ஏதோ கோடியில் ஒருவர்தான் இவ்வாறு நிலையடைய முடியும் என அவநம்பிக்கை கொண்டு பிதற்றுகின்றனர். நமது ஞானிகளெல்லாம், எல்லாரும் எல்லாமும் பெற வேண்டிய இத்தனை ஞானப் பொக்கிஷங்களை நமக்காக அருளிச் செய்தனர். மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் மரணமிலா பெருவாழ்வு அடையமுடியும். இது உறுதி! அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்றும் மண்ணில் மாந்தராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் புரிந்திடல் வேண்டும் என்றும் நம் முன்னோர்கள் பாடியதை நாமும் படித்திருக்கிறோமே! பொருள் புரியவில்லையா? மனிதனாக பிறந்ததே மிகப்பெரிய புண்ணியம். இந்தப் பிறவியில் தானே - கிடைத்தற்கு அருமையான இந்த மானிடப் பிறவியிலேயே, அடைய வேண்டிய மேலான நிலையான மரணமிலா பெருவாழ்வு அடைவோமாக! இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? எனவே விரைந்து வாரீர்! ஞானிகள் காட்டிய ஒழுக்க நெறிவழி நடந்து கண்ணிலே ஜீவன் இருக்கும் பாங்கினை உணர்ந்து சாதனை புரிந்து பரமாத்மாவோடு ஐக்கியமாகி பேரின்பப் பெருநிலை அடைவோம்! இறைவன் அருள் வடிவானவன். நம் எல்லோருக்கும் அருள் புரிவான்.



கண்மலர் ஐந்து

பஞ்ச பூதங்கள்

பஞ்ச பூதங்கள் என்றால் நிலம்-நீர்-நெருப்பு-காற்று ஆகாயம் என்ற ஐந்து சக்தியே. இந்த பிரபஞ்சம் பஞ்ச பூதங்களால் ஆனதே. இதிலுள்ள ஒவ்வொன்றும் பஞ்ச பூதக் கூட்டுறவே. நாம் கண்ணுறும் அனைத்தும் இவ்வைந்தின் சேர்க்கையேயாகும். பஞ்ச பூதங்கள் ஒவ்வொன்றிலும் ஏனைய அம்சங்களும் உண்டு. அதாவது நிலத்தில் ஏனைய அம்சங்கள் உண்டு. நீரில் ஏனைய அம்சங்கள் உண்டு. எல்லாமும் இப்படியே எத்தன்மை மிகுந்துள்ளதோ அதால் அது வழங்கப்படுகிறது. எல்லாவற்றிற்கும் முடிவு மாற்றம் உருவாக்குவது-சிறப்புடையது நெருப்பேயாகும். நெருப்புதானே எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்கிறது. முடிவில் அதுதானே நமக்கும்! தற்போது காஞ்சியிலே அருள் பாலிக்கும் பெரிய சங்கராச்சாரிய சுவாமிகள் ஒரு அன்பரின் கேள்விக்கு கீழ்க்கண்டவாறு பதில் கூறினார்கள். மனிதனாகப் பிறந்தால் ஜோதியாக போகணும் அல்லது ஜோதியிலே வைக்கணும் என எவ்வளவு எளிமையாக கூறியுள்ளார் பாருங்கள்! சிந்தியுங்கள் இறைவன் படைப்பை என்னென்று சொல்வது! எல்லாவற்றையும் ஆக்குபவன் இறைவனே! இதைப் புரிந்து கொள்வதே மிகப்பெரும் புண்ணியம். எல்லாவற்றிலும் நிறைந்து இருக்கும் அவனே எல்லாவற்றையும் உருவாக்கியவன். எல்லாவற்றிற்கும் மூலம், பரமாத்மாவாகிய மூலத்தை பிடித்தால் முழுதும் பிடித்துவிடலாம்.

இப்பிரபஞ்சமே பஞ்சபூத கூட்டுறவே. நம் உடலும் பஞ்ச பூதக் கூட்டுறவே. எப்படி எனில் மண் அம்சம்-எலும்பு, சதை, நீர் அம்சம் இரத்தம் வியர்வை, நம் உடல் உஷ்ணம் நெருப்பு அம்சம், நாம் சுவாசிக்கும் காற்று வாயு அம்சம், ஆகாய அம்சம் இத்தனையும் தாங்கியிருக்கிறது. எண் சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். நமது சிரசில்-தலையில், மெய், வாய்-கண்-மூக்கு-செவி என பஞ்சேந்திரியங்கள் உள்ளன. நம்மை இயக்குபவை இவையே. தலை-மெய்- மண் அம்சம், வாய் - நீர் அம்சம், கண் - ஒளி நெருப்பு அம்சம், மூக்கு- வாயு அம்சம், செவி- ஆகாய அம்சம் என ஐந்து சக்திகளும் காரியப்படுகிறது. இந்த ஐந்து இந்திரியங்களைத்தான் நாம் ஞானேந்திரியங்களாக நாம் சாதனையால் மாற்ற வேண்டும். எனவே நாம் புரிந்துகொள்ள வேண்டியது-நாம் ஞானம்பெற நம் தலைப்பகுதியில் உள்ள ஐந்து இந்திரியங்களை-ஐந்து புலன்களை நம் கைவசப்படுத்த வேண்டுவதேயாகும். புலன்கள் போகிற பாதையில் போனால் அழிவு நிச்சயம். புலன்களை அடக்குவதோ

பாரதியின் அறுபத்தாறு பாடல் தொகுதியை படியுங்கள். உண்மையை உணரலாம்.

குமரி மாவட்டம் தக்கலை ஞானமாமேதை பீர்முகமது ஒலியுல்லா அவர்கள் பற்பல பாடல்களில் ஞான ரகசியங்களை மக்களுக்காக வழங்கியுள்ளார்கள். இல்லல்லா நாலில் ஒன்றை இருத்தியே எட்டின் மீதே என ஞான சாதனைக்கு ஒரு பாடல் உள்ளது. இதன் பொருள் யாதெனில் இல்லல்லா நாலில் ஒன்றை அந்த கரணம் நாலில் ஒன்றை - மனம், சித்தம், புத்தி, அகங்காரமாகிய அந்தகரணங்கள் நாலில் ஒன்றை - அதாவது மனதை இருத்தியே எட்டின் மீதே - எட்டின் மீது இருத்தியே. எட்டு என்பது எட்டும் இரண்டும் என சொல்வதில் உள்ள எட்டு அதாவது சூரியன் அதாவது வலது கண் என பொருள்படும். இதன் கருத்து வலது கண்ணில் மனதை நிறுத்தி சாதனை செய் என்பதே. திருவருட் பிரகாச வள்ளலார், எப்போதும் சூரிய கலையிலேயே இருங்கள் என்றதும் இதைத்தான்! இதிலிருந்தாவது ஞானிகள் மதத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்பது புரிகிறதல்லவா? எல்லோருக்கும் ஞான அனுபவம் ஒன்றுதான் என்பதும் புரிகிறதல்லவா? நன்கு புரிந்து, - நலமுடன் வாழ சூரியனைப் பற்றுங்கள் மேன்மையடையுங்கள்.

❁ ❁ ❁ ❁ ❁



கண்மலர் ஆறு

உடல்

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது கூன் குருடு செவிடு பேடு நீங்கி பிறத்தல் அரிது தானமும் தவமும் செய்தல் தான் அரிதே என ஔவையார் தெளிவாகக் கூறியுள்ளார்கள். மானிடராய் பிறத்தல் அரிது. எந்த குற்றங் குறையுமில்லாமல் பிறத்தல் மிகவும் நன்று. இப்படி பிறந்திருக்கின்ற நாம் மிகவும் அரிய செயலான தானமும் தவமும் புரிந்து கிடைத்ததற்கு அருமையான இம்மானிடப் பிறவியிலேயே அடைதற்கு அருமையான மேலான முடிந்த முடிபான நிலையான மரணமிலா பெருவாழ்வு பெறவேண்டும். மானிடப்பிறவி எடுத்ததின் நோக்கமே அதுதான் என்பதை நாம் உணரவேண்டும். இம்மானிடப் பிறவியில் எல்லோருக்கும் அத்தியாவசிய தேவையான உணவை தானமாக நாம் கொடுத்தால் அது மிகவும் சிறந்ததே. ஒவ்வொரு ஜீவ ராசிக்கும் உணவு மிகமிகத் தேவை. எனவே அன்னதானம் மிகச் சிறந்ததே. இதனை மகேஸ்வர பூஜை என்றும் சொல்வர். இதன் சிறப்பை உணர்ந்தே வள்ளலார் வடலூரில் தர்மச் சாலையை ஏற்படுத்தி பசித்த பாராயினும் அவர்களுக்கெல்லாம் அன்னம் வழங்க வழிவகை செய்தார். இன்றும் தினமும் எண்ணற்றோர் பசியை போக்கி வருகிறது. கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேலாக இத்திருப்பணி நடந்து வருகிறது.

கர்நாடக மாநிலத்தில் மைசூருக்கு அருகே 'தர்மஸ்தலா' என்று ஒரு ஊர் உள்ளது. அங்கே ராஜ பரம்பரையை சேர்ந்த புண்ணியவான் ஹெக்டே என்னும் ஒரு ஆன்மநேய அன்பர் தற்போது தினமும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் வழங்கி வருகிறார்கள். பரம்பரை பரம்பரையாக அவர் முன்னோர்கள் தொடங்கிய பணியை மேலும் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். உலகிலேயே மிக அதிக அளவு அன்னதானம் தினமும் நடைபெறுவது தர்மஸ்தலா ஊரில்தான். வாழ்க அம்மகான்! வளர்க அவர்தம் பணி! எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பார்.

அன்னதானத்திற்கு அடுத்த, மேலான அரிதான தானம் ஞான தானம். ஆன்ம தாகங் கொண்டோருக்கெல்லாம் வாரி வாரி வழங்க வேண்டும்! ஒரு ஜீவன் கடைத்தேற வழிகாட்டுவதல்லவா? எவ்வளவு புண்ணியம்! இதைவிட பெருஞ்செயல் வேறென்ன இருக்க முடியும்?! ஆனால் ஆன்ம தாகம் கொண்டவர்கள் உலகில் மிகவும் குறைவு,

கண்மலர் ஏழு

சற்குரு இராமலிங்க சுவாமிகள்

திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் "ஊன உடலே ஒளி உடலாக ஓங்கப் பெற்றேன் ஞான அமுது எனக்கு நல்கியதே அருட் பெருஞ்ஜோதி" என்று தன் அனுபவத்தை கூறியுள்ளார்கள். இப்படியெல்லாம் அடைய முடியுமா ? கதை விடுகிறார்கள் என நம்பாத போர்களுக்கு கடந்த நூற்றாண்டில் வடலூரில் வாழ்ந்த வள்ளலார் வரலாறு சாட்சியாக உள்ளது. வள்ளலார் 1874-ஆம் ஆண்டு தைப் பூசத்தன்று முன் இரவில் மேட்டுக்குப்பம் சித்தி வளாக திருமாளிகையின் உள்ளே சென்று, வெளியே பூட்டி விடும்படி அன்பர்களுக்கு கட்டளையிட அன்பர்களும் அவ்வாறே செய்தனர். சில நாட்கள் சென்றபின் அன்றைய வெள்ளைக்கார ஆட்சியாளர்கள் வந்து திறந்து பார்க்க அந்த அறை முழுவதும் ஒரே ஜோதிமயமாக இருந்தது என்றும் வேறு யாரும் அங்கு இல்லை என்றும் குறிப்பு எழுதி வைத்துள்ளனர். அந்த அரசாங்கக் குறிப்பு இன்றும் சாட்சியாக உள்ளது. இதன் பிறகாவது நம்பலாம் அல்லவா ? வள்ளலார் மரணமிலா பெருவாழ்வு அடைய மக்களை கூவி அழைத்தோடு மட்டும் நில்லாமல், தானும் தன் ஊன உடலை மேலான ஒளியுடலாக மாற்றி உடலோடு நம் கண்ணுக்கு புலப்படாது மறைந்து மரணமிலா பெருவாழ்வு அடைந்த ஒப்புயர்வில்லா மாபெரும் ஞானியாவார்.

மனிதகுலம் உய்வதற்காகவே-மண்ணில் நல்ல வண்ணம் வாழும் நெறிமுறையை மக்களுக்கு தொகுத்து வழங்கிய மகான் ஞானி-சித்தர்-யோகி-வள்ளல்-சற்குரு இராமலிங்க சுவாமிகளை எல்லாம் வல்ல அருட் பெருஞ்ஜோதி ஆண்டவன் தோற்றுவித்தார். 1823 அக்டோபர் 5-ஆம் நாள் புரட்டாசி மாதம் சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தார். தன் ஒன்பதாவது வயதிலேயே முருக பெருமானால் ஆட்கொள்ளப்பட்டார். தெய்வ மணிமாலை பாடல்களைப் பாடி சென்னை கந்தகோட்டம் முருகன் அருள் பெற்றார் பெரும் புலவர்களும் வியக்கும் வண்ணம் பாடினார். அப்படி அவர்கள் வியப்படைந்ததிலும் ஆச்சரியம் ஒன்றுமில்லை. காரணம் வள்ளலார் கற்று வல்லார் அல்லர். இறைவன் அருளால் ஓதாதுணர்ந்தவர். அவர் பாடியதில் வியப்பேதும் இல்லை. அன்று தொட்டு தம் வாழ்நாள் முழுவதும் சுமார் 6000 பாடல்கள் பாடி அருளினார்கள். அவை

திருஅருட்பா என அன்பர்களால் தொகுத்து வெளியிடப்பட்டது. தற்போது மிக அழகிய பதிப்பாக திருவருட்பா முழுமையும் இரு பகுதிகளாக சன்மார்க்க தேசிகன் அருட்திரு ஊரன் அடிகள் அவர்கள் வடலூரிலிருந்து வெளியிட்டுள்ளார்கள். நன்றிகள் பல அவருக்கு.

வள்ளலார் மற்றெல்லா ஞானியரிலிருந்தும் வேறுபட்டவராவார். தூய வெள்ளாடையே அணிந்தார். தலையில் முக்காடு போட்டு கைகளை கட்டியே நடந்தார். வடலூரில் தர்மசாலையை நிறுவி பசித்த யாராயினும் புசிக்க அன்னம் வழங்க ஏற்பாடு செய்தார். அவர் கையால் ஏற்றிய அடுப்பு அணையாமல் இன்றளவும் எரிந்து கொண்டு வருவோருக்கெல்லாம் உணவுகொடுத்து வருகிறது.

வள்ளலார் ஜாதி மத இன பேதமற்ற சமத்துவ சமுதாயம் காண விழைந்தார். அதற்காக ஒரு சங்கம் கண்டார். கொலை புலை தவிர்த்தோரையே சன்மார்க்க சங்கத்தார் ஆக்கினார். ஜீவ காருண்ய ஒழுக்கம் எவ்வளவு முக்கியமான ஒன்று என மக்களுக்கு பலவிதங் களில் தெளிவுபடுத்தினார். ஜீவ தயவு இல்லாமல் அன்பு இல்லாமல் ஆண்டவனை அடைய முடியாது என அறுதியிட்டுக் கூறினார். ஜீவ காருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல் எனப் பகர்ந்தார். அன்பினாலல்லாது வேறு எம் முயற்சியினாலும் ஆண்டவனை அடைய முடியாது அதனால் எல்லா உயிர்களிடத்திலும் அன்பு பாராட்டுங்கள். எந்த உயிரையும் கொல்லாதீர்கள் துன்புறுத்தாதீர்கள் என வேண்டினார். நல்லொழுக்கங்களைக் கற்பித்தார். நம் முன்னோர் வகுத்த வாழ்க்கை நெறிமுறைகளை தொகுத்து நித்திய கருமவிதி என நாம் உருப்பட வழி காட்டினார்கள். அவரின் உபதேசங்களை நன்றாக படித்து நாம் அவர் காட்டிய மரணமிலா பெருவாழ்வு அடைய வேண்டும்.

வெள்ளாடைத் துறவி வள்ளலார் மக்களுக்கு ஞான ரகசியங்களை வெளிப்படுத்தி, இறைவன் தன்மையை மக்களுக்கு உணர்த்த வடலூரில் சத்திய ஞான சபையை ஏற்படுத்தினார். ஒவ்வொரு தைப் பூசத்தன்றும் ஜோதி தரிசனம் காண வாருங்கள் என மக்களை கூவி அழைத்தார். இறைவன் ஜோதி வடிவினன் என்பதை மக்களுக்குத் தெரிவித்தார். தைப் பூசத்தன்று காலை கிழக்கு திசையில் சூரியன் உதயமாகும் மேற்கே சந்திரன் மறையும் நடுவில் சத்திய ஞான சபையில் அகண்ட பெருஞ் ஜோதியை ஏழு திரை நீக்கி தரிசனம் காண செய்வித்தார்கள். இதுவே மிகப்பெரிய தத்துவம். நாம் நமது வலது கண்ணாகிய சூரிய கலையோடும் இடது கண்ணாகிய சந்திர கலையோடும் ஒளி பொருந்திய அக்கினி கலையாகிய மத்தியில் உள்ள பரம்பொருளை தரிசிக்க ஏழு திரைகள் தடையாக உள்ளது. நம்மிடம் உள்ள துர்க்குணங்களின் கூட்டே ஏழு திரைகள். நாம் நம் கண்ணில் ஒளியைப் பெருக்கப் பெருக்க நம்மிடம் உள்ள அஞ்ஞானமாகிய இருளாகிய - ஏழு திரைகள் ஒவ்வொன்றாக

கட்டிக்காட்டிய பாதையில் செல்லுங்கள் இறைவனை அடையலாம். மரணமிலா பெருவாழ்வு வாழலாம்.

ஆன்மநேய ஒருமைப்பாட்டுடைய மெய்யன்பர்களே, திவ்ய ஆத்ம சொரூபிகளே, திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளிய திருவருட்பா ஆறாம் திருமுறை 54-ஆவது பதிகம் 11-ஆவது பாடல்-திருவருட்பா 4067-ஆவது பாடல் நமக்கு கிடைத்தது 2 வரிகளிலேயே? முதல் இருவரிகள் அறிய முடியாமல் உள்ளதாக, ஆ. பாலகிருஷ்ண பிள்ளை தம் பதிப்பில் கூறியுள்ளதாக சன்மார்க்க தேசிகன் அருட்திரு ஊரன் அடிகள் தற்போது வெளியிட்டுள்ள திருவருட்பாவில் கூறியுள்ளார்கள். கிடைக்காமல் போன 2 வரி என்ன? என எனக்குள் நான் வினவியபோது என்னுள்ளிருந்து வள்ளல் பெருமானே எடுத்துக் கொடுத்தது இவ்விரண்டு வரிகளே! "இனி நான் எல்லோர் உள்ளத்திலிருந்தும் இயங்குவேன்" என வள்ளலார் கடைசியாக கொடுத்த உபதேசம் உண்மையன்றோ! ஞானம் பெற விரும்பும் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் வள்ளல் பெருமான் குடிபுகுந்து அவர்கள் கடைத்தேற நல்வழி காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகா! எவ்வளவு பெரிய இரக்க உள்ளம்!! அன்பின் திரு உருவமே வள்ளலார்!!! இதோ முதல் இருவரிகள்.

"ஒரார் முகமும் காட்டுவித்து ஒங்கும் படிகள் ஏற்றுவித்த
பாரூர் பதியே சோதியேநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே"

என என்னுள்ளிருந்து இரண்டு வரிகளை வள்ளலார் தந்துள்ளார்கள். ஏற்கனவே உள்ள மீதி இரண்டு வரிகள்.

"நாரா யணனு நான்முகனு நயந்து வியக்க நிற்கின்றேன்
ஏரார் உலகில் இனி அடியேன் செய்யும் பணியை இயம்புகவே"
- திருவருட்பா 4067

திருவருட் பிரகாச வள்ளல் பெருமானே, ஏரார் உலகில் இனி அடியேன் செய்யும் பணியை இயம்புகவே.

அன்பர் பணிசெய்ய எம்மை ஆளாக்கி விட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே,

எல்லோரும் இன்புற்றிருக்க அருள்புரி எம் பெருமானே!

அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ் ஜோதி

கண்மலர் எட்டு

பசித்திரு - தனித்திரு - விழித்திரு

எத்தனையோ மகான்கள் இந்த பாரத புண்ணிய பூமியில் அவதரித்துள்ளார்கள். அத்தனை பேருக்கும் நமது வணக்கத்தை பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம். எண்ணிலா மகான்கள் தோன்றியும், எல்லாவிதத்திலும் உயர்ந்த ஞான பொக்கிஷங்களை நமக்கு கொடுத்தும் நம்மில் பெரும்பான்மையோர் இன்னும் அஞ்ஞானிகளாய் மாயையில் சிக்குண்டு தவிக்கிறார்களே ஏன்? நமக்கு இதை போதிப்பவர்கள் இல்லையா? ஏராளமாக இருக்கிறார்கள்! பின் ஏன் இந்நிலை? ஊருக்குத்தான் உபதேசம் உனக்கும் எனக்கும் இல்லை என்பதுபோல் பெரும்பான்மையோர் நடப்பதுதான். இனிமையாக இருக்கிறது - உயர்ந்தது - மேலானது - இதுதான் ஞானம் என ஒத்துக் கொள்பவர்கள் பெரும்பாலோர் நடைமுறையில் கடைப்பிடிப்பதில்லை. தான் வாழ்ந்து காட்டுவதில்லை. படிப்பதோடு சரி, இன்னும் சிலரோ விடிய விடிய கதை கேட்டும் சீதைக்கு சித்தப்பா ராவணன் என்ற கதைதான்.

இதுவரை எத்தனையோ மகான்கள் தோன்றினார்கள் இன்னும் தோன்றுவார்கள். அவர்கள் திரும்பத் திரும்ப இறைவனைப் பற்றியும் அடைய வழிவகைகளையும் உபதேசிப்பார்கள், அவர்களில் பலர் உயர்நிலையை அடைவர். உபதேசிப்பதோடு தானும் நடந்து காட்டுவதால் அவர்கள் மரணமிலா பெருவாழ்வு அடைவர். ஆனால் கேட்பவர்கள் அதன்படி நடக்கிறோமா? நடக்கவேண்டும் என்ற பேராசையால்தான் ஞானிகள் சொல்லி வைத்தனர். காலம் போகப்போக வெளிப்பாடுகள் அதிகமாகிக் கொண்டே வருகின்றது. அவர்கள் கடமை சுட்டிக்காட்டுவது மட்டுமே. இன்னும் எத்தனைபேர் வந்தாலும் இதைத்தான் செய்வார்கள். எல்லாவற்றுக்கும் மேலானவன் இறைவன். அவன் நம் உடம்பில் கண்ணில் ஒளியாக உள்ளான். நாம் சாதனை செய்து ஒளியைப் பெருக்கி நம்மை உணர்ந்து பின் பரமாத்மாவாகிய இறைவனை அடையலாம். அதற்கு இன்னின்ன மாதிரி நடக்கவேண்டும் என கூறுவர். அதன்படி நடக்க வேண்டியது நாம்தான். நாம் முயன்றால்தான் - நாம் சாதனை செய்தால்தான் பரம்பொருளை உணர முடியும். சாதனையின்றி சாதிப்பார் யாருமில்லை என கைவல்யம் கூறும். ஞான ரகசியங்களை நூல்வழி

சிலர், "கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்" எனச்சொல்லி, கடவுளைக் கண்ட யாரும் சொன்னதில்லை எனவும் சொன்னவர்கள் உண்மையிலேயே கடவுளைக் கண்டவர்கள் அல்லர் எனவும் புரியாமல் பேசுவர். எனவே இவையெல்லாம் பொய் நம்பாதீர்கள் என்பர் அறிவில்லாமல்? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். இதுவும் பரிபாஷையே. கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் கண்டவர் கண்தானே காண்கிறது. விண்டவர்-வாய் தானே பேசுகிறது. கண் பேசுமா? வாய் காணுமா? கண்டவராகிய கண் விண்டிலர். விண்டவராகிய வாய் கண்டிலர் இதைத்தான் ஞானிகள் கூறினர். கண்டவராகிய கண் பேசாது, அதனால்தான் கண்ணை மௌனம் என்றனர். மோனம் என்பது ஞான வரம்பு என ஔவையார் கூறுகிறார். மோனம்-மௌனம் ஆகிய கண்தான் ஞானவழிக்கு வாசல்-உடலின் உட்புகும் வாசல் என்று ஞானியர் கூறுகின்றனர். சிந்தியுங்கள். சிந்தியுங்கள் பின்னரே தெளிவு பிறக்கும்.

"சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி
நேத்திரங்கள் போற் காட்டநேராவே - நேத்திரங்கள்
சிற்றம்பலவன் திருவருட் சீர் வண்ணமென்றே
உற்றிங் கறிந்தேன் உவந்து"

என வள்ளல் பெருமான் உரைக்கிறார். நேத்திரங்கள் என்றால் கண்கள். சாத்திரங்களை நாம் உண்மையறியாது படிப்போமானால் நமக்கு தடுமாற்றமே உண்டாகும்-புரியாது. ஆனால் கண்களாகிய சிற்றம்பலத்தில் குடியிருக்கும் இறைவனை அறிந்து பார்த்தோமானால் கண்கள் நமக்கு அனைத்தையும் அறிவிக்கும். எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிடும். இந்த உலகத்தையும் இது போன்ற பற்பல உலக நிலையையும் நமக்கு உணர்த்தும். நாமும் உணரலாம்-ஞானமடையலாம் - பரிபூரண அறிவு பெறலாம். இறைவன் நமக்கு கொடுத்த மாபெரும் சீர் - திருமணத்தின்போது பெண்ணிற்கு என்னென்ன சீர் செய்வீர்கள் என நாம் கேட்கிறோமல்லவா? அதுதான். ஜீவர்களாகிய நமக்கு ஆண்டவர் கொடுத்த சீர்தான் கண்கள். அதை எல்லாம் வல்ல அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் அருளால் உணர்ந்து கொண்ட வள்ளலார் நாமும் அறிந்து கொள்ளவே பாடி திருவருட்பாவை நமக்கு அருளி யிருக்கிறார்கள். என்னே அவர்தம் கருணை! இரக்கம். நான்பெற்ற நெடும்பேற்றை ஓதி முடியாது என் போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே என ஆண்டவரிடம் வேண்டிய கருணையின் வடிவமாயிற்றே அவர்! தான் அறிந்தவற்றை வெளிப்படுத்தி உலகர் அனைவரும் மரணமிலா பெருவாழ்வு அடைய வழிகாட்டினார். திருவருட் பிரகாச வள்ளல் - சற்குரு - இராமலிங்க சுவாமிகள் திருவடிகளை என்றும் வணங்குவோமாக!

கண்மலர் ஒன்பது

சாத்திரத்தில் சிறந்தது

நமக்காக நமது முன்னோர்கள் எத்தனையோ ஞான பொக்கிஷங்களை தந்தருளியிருக்கிறார்கள். தமிழ் அறிந்தவர்கள் உண்மையிலேயே மிகவும் பாக்கியசாலிகள். இங்கே இருக்கின்ற அளவு ஞான நூல்கள் வேறு எங்கும் இருப்பதாக தெரியவில்லை. இங்கே இருக்கின்ற அளவு ஞானப் பெருமக்கள் வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ்நாட்டில் தடுக்கி விழுந்தால் ஒரு சமாதியின் மேல்தான் விழவேண்டியிருக்கிறது. சமாதி என்றால் சம-ஆதி. அதாவது ஆதியான இறைவன் நிலை அடைந்தவர்கள் செத்தவனை புதைத்தால் அது சமாதி அல்ல. இது ஜீவ சமாதி. நிர்விகல்ப சமாதி என பல நிலைப்படும். தமிழ்நாட்டில் பல ஊர்களில் ஆங்காங்கே குருபூஜை நடக்கும். அங்கே சமாதி கொண்டிருக்கும் மகானுக்கு நடக்கும் விழாதான் குருபூஜை. ஒரு சில கோயில்களில் சித்தர் பெருமக்களின் சமாதியின்மேல் தெய்வத்திரு உருவங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. பல கோயில்களின் படிக்கட்டுகளிலும், சுற்றுப்புறங்களிலும் மலைகளிலும் சமாதிகள் நிறைய இருக்கின்றன. இதன்மூலம் ஒன்றை மட்டும் புரிந்துகொள்ளுங்கள். இறைவனாம் ஆதிக்கு சமமானவர்கள் இங்கே அதிகம். ஆதியை நெருங்கத் துடிப்பவர்களும் அதிகம். இதுதான் இந்த மண்ணின் மகத்துவம். இது ஞானபூமி. இதில் பலநிலைப்பட்டவர்கள் உண்டு. பெரும்பாலோர் பிற்கால சந்ததியினர் உய்ய வழிகாட்டிச் சென்றுள்ளனர். அங்ஙனம் வெளியான ஞானநூல்கள் ஏராளம். அவற்றுள் தலையாயது! ஏன் உலகத்திலேயே தலை சிறந்தது என்று கூட கூறலாம்! சாஸ்திரங்களிலெல்லாம் உயர்ந்தது! மேன்மையானது திருமூலர் அருளிய திருமந்திரம் ஆகும். "சாத்திரத்தில் சிறந்தது திருமந்திரம்".

உலகத்தில் மனிதன் அறிய வேண்டிய அனைத்து விஷய ஞானமும் திருமந்திரத்தில் உள்ளது. திருமூலர் எழுதியது இந்த ஞானக்களஞ்சியம். திருமூலர் கைலாயத்திலிருந்து வரும்போது மூலன் என்னும் மாடு மேய்ப்பவன் இறந்து கிடந்ததை கண்ணுற்று, அதனால் வருந்தும் பசுக்களின் துயர்கண்டு இரங்கி, கூடுவிட்டு கூடுபாய்ந்து மூலன் உடலினுள் புகுந்து, பசுக்கூட்டத்தின் துன்பம் போக்கி, அவைகளை அதனதன் இடம் விட்டு திரும்புகையில், தன் உடல் காணாது திகைத்தார். இறைவன் தன்னை மூலன் உடலிலேயே தங்கியிருக்க அருளியதை உணர்ந்தார். பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்த மூலனாக இல்லாமல்

கண்மலர் பத்து

தோத்திரத்தில் சிறந்தது

திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது ஆன்றோர் வாக்கு. எண்ணரிய தோத்திர நூல்கள் தமிழில் உள்ளன. இருப்பினும் திருவாசகத்திற்கு ஒரு தனி மகத்துவம் இருப்பதை அதில் அமிழ்ந்தவர்கள்தான் உணர்வர். திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் தம் வாழ்நாள் முழுவதும் திருவாசகத்தின் பெருமையை கூறிக்கொண்டே இருந்தார். அப்பேர்ப்பட்ட ஞானியை மிகவும் கவர்ந்த நூல் திருவாசகம் என்றால் இதன் பெருமையை என்னென்று கூறுவது! வள்ளலாரே கூறிய சொல் இதுதான். "தோத்திரத்தில் சிறந்தது திருவாசகம்". இதன் பெருமையை யார் எப்போது கேட்டாலும் கூறுவார். சிலர் வள்ளலாரிடம் பேச விரும்பினால் திருவாசகத்தைப் பழித்துக் கூறுவர். உடனே வள்ளலார் அவரைக் கடிந்து திருவாசகத்தைப் பற்றி நீண்டநேரம் உரையாற்றுவார். கேட்டவரும் மகிழ்வர். அவ்வளவு தூரம் திருவாசகத்தின் மீது அபரிமிதமான பக்தி கொண்டிருந்தார் வள்ளலார்.

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

என திருவாசகப் பெருமையை அதன் படைப்பாளியாம் மாணிக்கவாசகரை போற்றிப்பாடி மகிழ்ந்தார் வள்ளலார்.

திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் 'ஞானத்தாழிசை' என்னும் 12 பாக்களை இயற்றினார்கள். ஞான அமுதம் அது. இதுபற்றி பெரும்பாலோர் அறியாததினால் அப்பாடல் முழுமையும் இங்கே தருகிறோம்.

ஞானத்தாழிசை

சுழியாகிய முனைகண்டபின் உற்றாருற வற்றாய்
சூதும்பல பொய்பேசிய தொழிலும் பிறர்க்கிட்டாய்
வழியாகிய துறைகண்டபின் அனுட்டானமு மற்றாய்
வழங்கும் பலநூல்கற்றிடு நினைவும் பிறர்க்கிட்டாய்
விழியாகிய மலர்கண்டபின் உயரர்ச்சனை யற்றாய்
மெய்ந்நீறிடு திருமந்திரம் விட்டாய் சிவமுற்றாய்

அழியாப்பதி குடியேறினை அச்சம்பல வற்றாய்
யாரொப்பவர் நிலையுற்றவர் அலைவற்றிரு மனமே 1

நெஞ்சிற் பொருளடி கண்டபின் நெஞ்சிற் பகையற்றாய்
நேசத்தொடு பார்மங்கையர் மேலும் நினைவற்றாய்
மிஞ்சிச்சொலு முரையாண்மையும் வீம்பும் இடும்பற்றாய்
விரதங்களும் வேதங்களும் வீணாக மறந்தாய்
அஞ்சும் உடலாய்க் கண்டபின் ஆசைத்தொடர் பற்றாய்
ஆருந்திருக்கோயில் சிவம் அதுவும் தனில் உற்றாய்
தஞ்சம் எனும் ஞானக்கடல் மூழ்குந் திறமாகித்
தாள் சேர்ந்தனை குறைவேதினி சலியாதிரு மனமே 2

நாசிநுனி நடுவேதிருக் கூத்தாகிய நடனம்
ஞானக்கண் ணாலதனை நாடிச்செயல் கண்டு
சீசியெனு முரையற்றனை சினமற்றனை உயிர்கள்
செய்யுமந் நினைவற்றனை நேசத்துடன் கூடிக்
கூசிக்கூல வரவற்றனை கோளற்றனை பாவக்
குடியற்றனை நலமுற்றனை குடியேறினை மேலாங்
காசிப்புனல் தனில்மூழ்கினை கரையேறினை காட்சி
கண்டாய் அரன் கொலுவாகிய சபை மேவினை மனமே 3

வெளிபெற்றிடு சொரூபப்பொருள் வெளியாகிய ஒளியில்
விளையாகிய நாதத்தொனி விந்தின் செயல்கண்டு
களிபெற்றனை தயவுற்றனை பிறவிக்கட லென்னும்
தளையற்றனை உலகத்தினில் வரவற்றனை காணா
ஒளிபெற்றனை மயலற்றனை ஒழிவற்றனை ஓதும்
உரையற்றனை களிபெற்றனை பயனற்றனை ஊறல்
குளிபெற்றனை அரனுற்றிடு கொலுவுற்றனை கோமான்
கொடைபெற்றனை அறிவுற்றனை கோளற்றனை மனமே 4

பத்தோர் டிருகலையாகிய பனிரெண்டினில் நாலும்
பாழ்போகிட மீண்டேவரும் பதியின்கலை நாலும்
பெற்றோடி வந்திங்கேறிய பேர்மைந்தனை கண்டு
பேசும்நிலையோடும் உறவாகிப் பிணக்கற்றாய்
கற்றோருடன் கற்றோமெனும் வித்தாரமு மற்றாய்
கானற்புன லோகப்பிடி மானத்தையு மற்றாய்
சித்தோடிரு சித்தாகிய சிற்றம்பல மீதே
சேர்ந்தாய் குறைதீர்ந்தாய் இனிவாழ்வாயிரு மனமே 5

அல்லற்படு மோரொன்பது வாயில் பெருவாசல்
ஆருமறி வார்கள் அறியார்க ளொருவாசல்
சொல்லப்படு தில்லைச்சிறு வாசற்படி மீதே
சூழும்பல கரணாதிகள் வாழும் மணிவாசல்

கண்மலர் பதினொன்று

பாத்திரத்தில் சிறந்தது

சாத்திரத்தில் சிறந்தது திருமந்திரம். தோத்திரத்தில் சிறந்தது திருவாசகம் என நமக்குச் சுட்டிக்காட்டிய பெருந்தகையோன் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அதுவரை உலகில் தோன்றிய ஞானிகள் நூற்கள் அனைத்தையும் இனிமேல் வர இருக்கும் நூற்களையும் எல்லாம் வல்ல இறைவன் அருட் பெருஞ்ஜோதி ஆண்டவர் அருளால் ஓதாதுணரப் பெற்றார். தன் சிறுவயது முதலே தேவாரம், திருவாசகம், திருமந்திரம் உள்ளிட்ட அனைத்து ஞானிகள் நூற்களையும் பாடிப் பரவினார். சிறுவனாயிருக்கும்போதே பெரிய புராணச் சொற்பொழிவு ஆற்றும் வல்லமை பெற்றிருந்தார் என்றால் அவரின் அறிவுத்திறம் அருள் திறம் எத்தகையது! பிறந்ததும் வளர்ந்ததும் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டல்லவா? விளையும் பயிர் முளையிலே தெரிந்தது. வள்ளலார் மக்களுக்கு இறை உண்மையை தெளிவுபடுத்தி - எளிமைபடுத்தி - சன்மார்க்க வாழ்வு வாழ்ந்து மேநிலை அடைய வழிகாட்டினார். அதற்காக சன்மார்க்க சங்கம் அமைத்தார். தர்மச்சாலை ஏற்படுத்தினார். சத்திய ஞான சபை உருவாக்கினார். தைப் பூசத்திருநாளில் ஜோதி விழாகண்டவர். மரணமிலா பெருவாழ்வை மற்றவர்களுக்கு போதித்ததோடு தானும் அடைந்தார்.

சன்மார்க்கத்திற்கென தனிக்கொடி ஏற்படுத்தினார். இன்னும் எத்தனை எத்தனையோ சிறப்புகள் பெற்றவர். சீர்திருத்தம் புரிந்தவர். இப்படி எல்லாச் சிறப்புக்களையும் பெற்று எல்லாம் வல்ல அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரின் முதல் பிள்ளையாக பெருமை பெற்ற திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் கருத்துக் கருவூலம்தான் திருவருட்பா. இதுவரை வந்த அனைத்து மகான்களின் கருத்துக்களையும் தொகுத்து வழங்கிய பெருமை, உண்மைப் பொருளை உலகர் அறியச்செய்த பெருமை வள்ளலாரின் திருவருட்பாவையே சேரும். வள்ளலாரே தம் கூற்றில் இனி ஞான சித்தர்கள் காலம் என கூறுகிறார். எனவே ஞானிகள் பெருகட்டும். அதற்கு இந்த கண்மணிமாலை ஒரு தூண்டுகோலாகட்டும்.

திருவருட்பா பாத்திரத்தில் சிறந்தது என்பது அடியேன் கருத்து. 'பா' திறத்தில் மிகமிகச் சிறந்தது இது. சுமார் 6000 பாடல்களைப் பாடிய வள்ளலார் எந்தப் புலவரிடமும் பயிலாதவர், அருட்கவி. கற்க

வேண்டியவைகளை இறைவனிடமே கற்றார். எல்லாவித இலக்கண நெறிக்கு உட்பட்டதும் - மிக மிக உயர்ந்த நடையை உடையதுமாகும். இலக்கணம் படித்தவர் இதனை கண்டு வியப்பர்! சாதாரண மனிதன் இப்படி எழுத முடியுமா? திருவருட்பா எல்லா ஞானிகளின் கருத்துச் சாறு என்றால் திருவருட்பாவின் ஞானரசம் வள்ளலாரால் அருட்பெருஞ் ஜோதி அகவலில் திரட்டப்பட்டுள்ளது! இதனை படித்து வியக்காத பண்டிதனே கிடையாது! இனி சொல்வதற்கு வேறொன்றுமேயில்லை எல்லாம் இந்த அருட்பெருஞ் ஜோதி அகவல் ஒன்றிலேயே உள்ளது. இப்படி 'பா' வாகிய பாடல்களின் திறத்தில் மிகமிக உயர்ந்தது திருவருட்பா என்றால் அது மிகையாகாது. அடுத்து திருவருட்பா "பாத்திரத்தில் சிறந்ததாகும்." அதாவது-பாத்திரம்-இறைவன் நம் உடலில் காரியப்பட்டுள்ள சற்பாத்திரத்தின் திறனை நயம்பட உரைத்தப்பாங்கு, பாத்திரத்தின் இடம், தன்மை, செயல்படும் விதம், முடிவு எல்லாம் விளங்கக் கூறுவதால் - இது பாத்திரத்தின் சிறப்பை விளங்க வைப்பதால் பாத்திரத்திலும் சிறந்தது என்றாகிறது. இப்படி 'பா' திறத்தாலும், பாத்திரத்தை உணர்த்தும் பான்மையாலும் மிகச் சிறந்தது திருவருட்பா என்றால் அது யாராலும் மறுக்க முடியாததாகும். எனவே பாத்திரத்தில் சிறந்தது திருவருட்பாவேயாகும்.

திருவருட்பாவில் பல பாடல்களும் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் மகத்துவமும் இந்நூல் ஆரம்பத்திலிருந்தே பற்பல இடங்களில் விளக்கப்பட்டுள்ளது. எம் போன்றோரை நல்வழிப்படுத்திய இம்மகானை போற்றுவதும் அவர் தம் செந்நெறியை உலகருக்கு உணர்த்துவதும் எம் கடமையல்லவா? எம்மால் இயன்றளவு செவ்வனே செய்து வருகிறோம். திருவருட்பா பாடல் உரைப்பது இங்கே காணலாம்.

கண்ணின் உண்மணி யாயநின்தனைக் கருதிடாதுழல்
கடனேற்கருள் - திருவருட்பா - பாடல் 133

இறைவா கண்மணியான உன்னை கருதாமல் உழல்கின்ற கடனான எனக்கு அருள்வாயாக!

மணியே அடியேன் கண்மணியே மருந்தே - திருவருட்பா 183

இறைவனே என் கண்மணியாக இருப்பவனே என் பிறவிப் பிணிக்கு நீயே மருந்து என கூறுகிறார்.

என்றன் கண்ணே நீ அமர்ந்த எழில் கண் குளிரக் காணேனோ
திருவருட்பா 231

என் கண்ணே இறைவனே நீ கண்ணிலே அமர்ந்த அழகை கண்குளிரக் காண வேண்டுமே என்கிறார்.

காவிமலைக்கன் வதியேனோ கண்ணுள் மணியை துதியேனோ
- திருவருட்பா 278

கண்மணியில் நினைவை செலுத்தச் செலுத்த கண்களில் ரத்த ஓட்டம் மிகுந்து காவிக் கண்ணாகும். சந்நியாசியானவன் காவி கட்ட வேண்டும் என சொல்வது இதைத்தான். காவி உடைகள் தரித்தவனெல்லாம் சந்நியாசி அல்ல. இப்படிப்பட்ட காவி ஏறிய கண்ணிலேயே வசிக்க வேண்டும். மனம் தங்க வேண்டும் கண்மணியின் ஒளியை இறைவனை துதிக்க வேண்டும் என வள்ளலார் கூறுகிறார்.

பரமன் ஈன்றகண்ணே நின் தணிகைதனை கண்டு போற்றேன்-
திருவருட்பா 300

பரமனாகிய இறைவன் ஈன்ற பிள்ளையாகிய ஜீவனாகிய கண்ணே உன் தணிந்த நிலையாம் அமைதி-அருள் நிலையை காண வேண்டும் எனக்கு அந்நிலை வரவேண்டும் என்கிறார்.

என் இரு கண்ணின் மேவும் இலங்கொளி மணியே போற்றி -
திருவருட்பா 550

என் இரு கண்களிலும் உள்ள கண்மணியில் ஒளியாக நிற்கும் இறைவனை போற்றுகிறேன் என உரைக்கிறார்.

கண்ணினால் உனது கழற்பதம் காணும் கருத்தினை மறந்து -
திருவருட்பா 1049

இறைவா உன் கழற்பத்தை என் கண்ணினால் காண வேண்டும் என்பதனை மறந்து திரிகிறேனே என்கிறார்.

சொல் ஆர்ந்த விண்மணியை என் உயிரை என் மெய்ப்பொருளை
ஒற்றியில் என் கண்மணியை நெஞ்சே கருது - திருவருட்பா 1278

விண்மணியான இறைவனை, என் உயிரை, என் மெய்ப்பொருளை என் உடலில் தலையில் கண்மணியில் மனதை ஒற்றியிருந்து சாதனை புரி என்கிறார். மெய்ப் பொருளாம் இறைவன் உயிராகி நம் கண்மணியில் ஒற்றி இருக்கிறார்.

கண்ணுதலே நின் அடியார் தமையும் நோக்கேன்
கண்மணி மாலைக் கெனினும் கனிந்து நில்லேன்
- திருவருட்பா 1371

கண்-நுதலே, கண்ணிலே இருக்கும் இறைவனே, ஒளியே உன் அடியார்களைப் போற்றி அவர்களுக்கு பணி செய்யவும் அறிந்திலேன்.

கண்மணி மாலை-இரு கண்மணியைப் பற்றி நினைந்து உணர்ந்து நெகிழ்ந்து கனிந்து நிற்கவும் இல்லை என்கிறார் இந்நூலாகிய கண்மணி மாலை-க்கும் கனிந்து நில்லேன் என்று நாம் பாடுவதுபோல பாடப்பட்டுள்ளது பொருத்தமாக உள்ளது அல்லவா? வள்ளல் பெருமானே இந்நூலுக்கு வழங்கிய சிறப்புப் பாடலாகவே இதனை கருதுகிறோம்.

தண்ணார் அளியது விண்ணோர் ஒளியது சாற்று மறைப்
பண்ணார் முடிவது பெண்ணார் வடிவது பண்புயர் தீக்
கண்ணார் நுதலது கண்ணார் மணியது கண்டு கொள்ள
ஒண்ணா நிலையதொன்றுண்டே முக்கண்ணொடென் உள்ளகத்தே
- திருவருட்பா 1383

நம் உள்ளகத்தே ஒளியாக இறைவன் இருப்பதை காண அந்த இறைவனே ஜீவனாயிருக்கும் - எல்லாமாயிருக்கும் - கண்மணியை கண்டுகொள்ள வேண்டும் என்கிறார்.

கண்ணே அக்கண்ணின்மணியே மணியில் கலந்தொளிசெய்
விண்ணே
- திருவருட்பா 1392

இறைவன் கண்ணில் - கண்மணியில் உள்-ஆகாயத்தில் ஒளியாக உள்ளான். இப்படியாக எல்லா பாடல்களிலும் கண்ணில்-மணியில் ஒளியில் இறைவன் இருப்பதை நமக்குக் கூறுகிறார். எவ்வளவு எளிமையாக உள்ளது, இதற்கு விரிவான விளக்கமே தேவையில்லை. பாத்திரத்தின் தன்மையை, இறைவன் தங்கிய கண்ணாகிய பாத்திரத்தை இங்ஙனம் விளக்குகிறார் வள்ளலார்.


கண்ணின் மணிபோல் இங்குநிற்கும் கள்வர் இவர் ஊர் ஒற்றியதாம்
பண்ணின் மொழியாய் நின்பால்ஓர் பறவை பெயர் வேண்டினம்
படைத்தால்
மண்ணின் மிசையோர் பறவைபதாய் வாழ்வாய் என்றார்
என்னென்றேன்
எண்ணி அறிநீ என்கின்றார். இதுதான் சேடி என்னே டீ.
- திருவருட்பா 1796

திருவருட்பா இரண்டாம் திருமறையில் இங்கிதமாலை என்னும் தலைப்பில் இதுபோல் 100 பாடல்கள் உள்ளது. இங்கிதமாக சொன்னது இது. இதனை அவ்வளவு எளிதாக புரிந்து கொள்ள முடியாது! சிந்திப்பவர்களுக்கே விடை கிடைக்கும். திருவொற்றியூரில் குடிகொண்ட சிவன் பிச்சை எடுக்க வருகிறாராம். அப்போது ஒரு பெண்ணுக்கும் அவருக்கும் நடந்த உரையாடலாக இப்பாடலை வள்ளலார் புனைந்துள்ளார். எவ்வளவு ஆழ்ந்த ஞானவிளக்கம்! கற்பனை வளம்! தமிழ்ப் புலமை! நம்மை வியப்படைய வைக்கிறது. இதனை கற்றுணர்வது ஞானம் பெற விரும்பும் ஒவ்வொருவருக்கும் மிகவும் அவசியம். திருவருட்பாவின்

ஒவ்வொரு பாவும் அப்பப்பா! நினைக்க நினைக்க நெஞ்சில் அமுதூறும் தீந்தமிழ்ப் பாக்கள்! ஒவ்வொரு சொல்லும் மெய்ப்பொருள் விளக்கம். மனிதனாய் பிறப்பதற்கே மண்ணில் மாதவம் செய்திருக்க வேண்டும். ஞான நூல்களை அறிந்து மேன்மையடைய விட்டகுறை தொட்டகுறை வேண்டும். அது இருந்தால்தானே வாய்க்கும்! திருவருட்பாவை படிப்பவன், உணர்பவன் மேன்மை அடைவான். ஒரு அன்பர் கூறுகிறார்.

பத்திவரும் பழவினைகள் பறந்தோடு
மூலமலப் பகுதி மாயும்
புத்திவரும் புலை கொலைகள் புறம்போகு
மானந்தம் பொங்குஞ் சாந்த
முத்திவரும் அறியா நன் மோக்கமுறு
முதுகடல்சூ மூலகி லெல்லாச்
சித்திவரும் இராமலிங்க தேசிகன்றன்
அருட்பாவைச் சிந்திப் போர்க்கே.

திருவருட்பாவை சிந்தித்து சிந்தித்து உணர்ந்து வாழும் நெறிப்படி வாழ்பவர் வாழ்வாங்கு வாழ்வர். மரணமிலா பெருவாழ்வு பெறுவர்.



தங்கஜோதி ஞான சபையின் ஒசூர் சீடர்கள்
பத்மநாபன் - மகேஷ் - அரவிந்த் - லோகநாதன்

கண்மலர் பன்னிரெண்டு

சிந்தையை தெளிவிப்பது

சித்தர்கள் ஏராளம் உண்டு இங்கே. பதினெண் சித்தர்கள் ஞானக்கோர்வை என ஒரு நூல் இருக்கிறது. 18 பேர்கள் இருப்பார்கள் எனப் பார்த்தால் 20-க்கும் அதிகமான சித்தர் பாடல்கள் உள்ளது. அதன் பிறகுதான் புரிந்தது பதிணெண் என்றது 18 அல்ல பதி-எண் என்பது. பதியாகிய இறைவனை சதா காலமும் எண்ணத்திலே இருத்தியவர்கள் எனப்பொருள். அங்ஙனம் பதியை சிந்தையில் இருத்திய சித்தர்கள் இந்த ஞான பூமியாம் தமிழ் நாட்டில் ஏராளம் பேர்கள். நாமறிந்தது மிகக் குறைந்த அளவே. இந்த சித்தர்கள் அட்டமா சித்துக்களும் கைவரப் பெற்றவர்கள். தன்னை உணர்ந்து தன்னிலே இருப்பவர்கள். சித்தத்தை வென்றவர்கள் சித்தர்கள். மெய்ப்பொருள் உணர்ந்தவர்கள். மரணத்தை வென்றவர்கள். மண்ணூழிகாலம் வாழ்பவர்கள். சித்தர்களால் முடியாதது என்பது ஒன்றுமேயில்லை. என்றும் வாழ்பவர்கள், இறைவனுக்கு அடுத்தபடியாக நாம் போற்றுதற்குரியவர்கள்-சித்தர்கள்-ஞானிகளேயாகும்.

திக்கொடு திகந்தமும் மனவேகம் என்னவே
சென்று ஓடி ஆடிவருவீர்!
செம்பொன்மக மேருவொடு குணமேரு என்னவே
திகழ்துருவம் அளவு அளாவி
உக்ரமிகு சக்ரதரன் என்னநிற்பீர்; கையில்
உழுந்து அமிழும் ஆசமனமா
ஓர் ஏழு கடலையும் பருகவல்லீர்; இந்த்ரன்
உலகும் அயி ராவதமுமே
கைக்கு எளிய பந்தாய் எடுத்து விளையாடுவீர்;
ககனவட் டத்தை எல்லாம்
கடுகிடை இருத்தியே அஷ்டகுல வெற்பையும்
காட்டுவீர்; மேலும் மேலும்
மிக்கசித் திகள்எலாம் வல்லநீர்; அடிமைமுன்
விளங்கவரு சித்தி இலிரோ ?
வேதாந்த சித்தாந்த சமரச நன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே

சித்தர் பெருமக்களின் ஆற்றலைக்கூறி என்க்கும் ஆசி தருக என வேண்டுகிறார் தாயுமான சுவாமிகள்.

திருவருட் பிரகாச வள்ளலாரும் ஒரு சித்தரே. அவர் தம் வாழ்க்கையில் அவர் புரிந்த அற்புதச் செயல்கள் பல இதனை மெய்ப்பிக்கிறது. சித்தர்கள் முடிந்த முடிபான இறை நிலையை மனிதன் அடையும் வழியை உபதேசிக்கின்றனர். இந்த ஒரே ஒரு கருத்தைத்தான் அனைத்து சித்தர்களும் திடமாக-உறுதியாக சொல்கிறார்கள். மூட பழக்க வழக்கங்களை சாடுகிறார்கள். மனித குலம் உய்ய ஞானப் பாதையை காட்டுகின்றனர். இந்த காலத்தில் பலர் பெயரில் சித்தர் எனப் போட்டுக் கொள்கின்றனர் ஆசையோடு. புகழ் ஆசை கொண்ட இவர்கள் சித்தர்கள் ஆக முடியுமா ? எனவே இம்மாதிரி சித்தர்களை இனங்கண்டு மீண்டு, மாபெரும் நிலையடைந்து-நமக்காக பேரின்ப பெருநிலையை வெளிப்படுத்திச் சென்ற உண்மையான சித்தர்களை அடையாளங் கண்டு அவர்கள் வழி நடப்போம். அகஸ்தியர், காகபுசுண்டர், சிவவாக்கியர், போகர், கொங்கணர், கருவூரார், இடைக்காடர், அகப்பேய் சித்தர், குதம்பைச் சித்தர், மச்சமுனி, காலாங்கி, பாம்பாட்டி, சித்தர், அழுகண்ணி சித்தர், ராமதேவர், திருமூலர், வள்ளலார் இன்னும் பலர். கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த சித்தர் இராமலிங்க சுவாமிகள். இவர்களில் ஒருசிலர் கூறிய உண்மை ஞான விளக்கங்களை இங்கேக் காண்போம். சித்தர்கள் மனிதன் கருவானதிலிருந்து உருவாகி வாழ்வாங்கு வாழ்ந்து மரணத்தை வெல்வதுவரை அனைத்து விஷயங்களையும் எல்லோரும் புரிந்து கொள்ளும் வண்ணம் சாதாரணமாக நாம் பேசும் பேச்சு வழக்கிலேயே பாடி அருளினார்கள். எல்லா சித்தர்களுமே உண்மை விளக்கம் தந்துள்ளனர். பகுத்துணர்ந்து தெளிவடைந்தால் நாம் நலம் பெறுவோம்.

அகத்தியர்

அகத்தீசர் ஆகிய இவர் கட்டைவிரல் உயரம் என்பர். குறுமுனி என்பர். அதாவது அகத்திலே உள்ள ஈசர்-அகத்தீசர் என்பர். இறைவன் கட்டைவிரல் அளவிலான புகையில்லாத ஜோதி வடிவினன் என கடோபநிஷத் கூறுகிறதல்லவா ? அகத்தியரும் கட்டைவிரல் அளவினரே. கட்டைவிரல் அளவில் ஒரு மனிதன் இருக்க முடியுமா ? அகத்தியர் என்பது காரணப் பெயரே. இயற்பெயர் அல்ல. மேலும் நம் உடலின் உள்ளே உறையும் ஈசனையே அகத்து ஈசர் என்று கூறுவர் பெரியோர்கள். இது போன்றே எல்லா சித்தர்கள் பெயரும் காரணப் பெயரே இயற் பெயர் யாரும் அறியார் !

"பதியின்ன இடமென்ற குருவைச் சொல்லும் பரப்பிலே விள்ளாதே தலையிரண்டாகும்" எனக் கூறுகிறார் அகத்தியர்.

அதாவது பதியின்ன இடமென்ற குருவைச் சொல்லும் தலை இரண்டாகும் பரப்பிலே விள்ளாதே. பதி இன்ன இடம் என்ற - இறைவன் இருக்குமிடம் இது என நமக்கு குருவை சொல்லும் - சொல்லக்கூடிய குரு - நமது ஜீவன், தலை இரண்டாகும் - இரண்டு தலையாகும் - அதாவது தலைக்கு தலையாக உள்ள இரண்டு கண்களாகும் - கண்களில் உள்ளது. பரப்பிலே விள்ளாதே - வெளியிலே சொல்லாதே நீ உணர்ந்து அறி எனக் கூறுகிறார். இதைசிலர் இறைவன் இருக்குமிடம் எது என குரு சொன்னதை வெளியில் சொன்னால் உன் தலை இரண்டாக வெடித்துவிடும் என தமிழ் தெரியாத முட்டாள்கள் மக்களை பயமுறுத்தி விடுகின்றனர். யாருக்கும் தலை வெடிக்காது தைரியமாக உண்மை ஞான ரகசியங்களை எல்லோரும் அறிய எடுத்தியம்பி எல்லாரும் மேன்மையடைய உதவுங்கள்.

"தோணிபோல் காணுமடா அந்த வீடு சொல்லாதே ஒருவருக்கும்"

அகத்தியர் மக்களிடம் ஒருவருக்கும் சொல்லாதீர்கள் நீங்கள் அறிந்து உணருங்கள் என எல்லோருக்கும் சொல்கிறார். இறைவன் இருக்கும் இடம்-வீடு-நம் உடலில் தோணிபோல் காணும் என்கிறார். நமது கண் தோணிபோல்தானே இருக்கிறது ? இந்தத் தோணியேதான் இறைவன்-ஜீவன் குடியிருக்கும் வீடு. சீர்காழி ஊரில் குடி கொண்டிருக்கும் சிவனுக்கு தோணியப்பர் என்ற பெயர் இதனால்தான் வழங்குகிறது. தோணி போன்ற கண்ணிலே இருக்கிறான் சிவம் ஆகிய ஒளி. புரிந்து கொள்க, உணர்ந்து கொள்க.

வெளியிலே ஆடுதப்பா உற்றுப்பாரு என்கிறார். நமது கண் எல்லோரும் பார்க்கும்படி வெளியில்தானே இருக்கிறது. நமது கண்மணி எந்த பிடிமானமும் இல்லாமல் வெட்ட வெளியிலே அந்தரத்திலே - உள்ளது. அங்கே ஜீவன் ஒளியாக ஆடிக் கொண்டிருக்கிறது. அதை உற்றுப்பாரு அப்பொழுது காணலாம்-உணரலாம். இப்படி வெளியில் ஆடுவதை அம்பலத்தில் ஆடுகிறார் இறைவன் என்கிறார் வள்ளலார். அம்பலத்துக்கு வந்தாச்சா ? என நாம் கேட்கிறோமல்லவா ? அம்பலம் என்றால் கோயில் என்றும் வெளிப்பட்டுவிட்டது என்றும் பொருள். எல்லோரும் பார்க்கும் பொது இடம் அம்பலம் அதில் ஆடுகிறார் சிவன். நம்மிடம் இருப்பதோ சிறிய அம்பலம். சிறிய கண்ணில்தானே சிவமாகிய ஒளி ஆடிக் கொண்டிருக்கிறது. சிறிய அம்பலம் அதுதான் சிற்றம்பலம்-கண் இதில் 'திரு' வாகிய சிவன் ஒளி உள்ளது. எனவேதான் இதை "திருச்சிற்றம்பலம்" என்று எல்லோரும் கூறுகின்றனர்.

திருவாகிய ஒளி சின்ன நம் கண்ணில் எல்லோரும் பார்க்க அம்பலத்தில் ஆடுகிறது. ஆகா! திருச்சிற்றம்பலம்! திருச்சிற்றம்பலம்! திருச்சிற்றம்பலம்!

"மெய்ப்பொருள் - கண்ணிலாணியாகவே கலந்து நின்ற எம்பிரான்"

மெய்ப்பொருள் எனப்படுவது நமது கண்ணில் ஒளியாக கலந்து நிற்கின்ற இறைவன் ஜீவன் என்கிறார்.

"மூலமாங் குளத்திலே முளைத்தெழுந்த கோரையை
காலமே எழுந்திருந்து நாலுகட்டு அறுப்பீரேல்
பாலனாகி வாழலாம் பரப் பிரம்மமாகலாம்"

மூலம் என்றால் கண். அங்கே நீர் இருக்கிறதல்லவா? அதனால்தான் கண்ணை மூலமாகிய குளம் என்றார். இந்த குளத்தில் வேண்டாத கோரைப் புற்கள் முளைக்கின்றன. அதை தினமும் நாலுகட்டு அறுத்து தள்ளச் சொல்கிறார். காலையில் எழுந்து செய்ய வேண்டுமாம்? நமது மனம் சித்தம் புத்தி அகங்காரம் எனும் அந்தகரணம் நான்கினாலும் எழும் காம குரோதாதிகளாகிய துர்க்குணங்களையே விசாரித்து ஆத்ம விசாரம் புரிந்து நான்கையும் அறுத்து வெளியேற்ற வேண்டும். மனம் சித்தம் புத்தி அகங்காரமாகிய இந்நாலு கட்டுகளும் நம்மை பற்றாது இருக்க தினம் தினம் காலை பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து ஆத்ம விசாரம்-சாதனை செய்யச் சொல்கிறார். அங்ஙனம் நாம் நம்மிடம் உருவாகும் கோரையாகிய துர்க்குணங்களை அகற்றுவோமானால் பாலனாகி வாழலாம். என்றும் இளமையோடு வாழலாம். பரப்பிரம்மமாகி வாழலாம் என்கிறார்.

பட்டினத்தார்

"ஒளியிட்டதாள் இரண்டு உள்ளேயிருத்துவதுண்மையென்று
வெளியிட்டடைத்து வைத்தேனினிமேலொன்றும் வேண்டிலனே"

ஒளியிட்ட தாள் இரண்டு - ஒளியுள்ள திருவடி இரண்டு - ஒளி பொருந்தியிருக்கின்ற இறைவன் திருவடியாகிய இரண்டு கண்கள். ஒளிபொருந்திய இரு கண்களையும் உள்ளே ஊன்றி இருத்துவது சாதனை என்றறிந்து கண்மணி உள்ள வெளியிலே என் மனதை இட்டு உள்ளேயேயிருந்தேன், வெளியே மனதை செல்லாமல் அடைத்து விட்டேன். இதைத் தவிர எனக்கு வேறொன்றும் வேண்டாம் என்கிறார்.

"கண்டங் கரியதாம் கண்மூன்றுடையதாம்
அண்டத்தை போல அழகியதாம் - தொண்டர்
உடலுருகத் தித்திக்கும் ஓங்குபுகழ் ஒற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு"

கண்டங் கரியதாம் - கண்டம் கருப்பு நிறமுடையது - கருவிழி. கண் மூன்று உடையதாம் - மூன்று வட்டமான கண் என்பதே.

அண்டத்தைப் போல் அழகியதாம் - முட்டையைப் போல் அழகானது. தொண்டர் உடலுருகத் தித்திக்கும் - பக்தர் உடல் உருக தித்திப்பது - பரவசம் உண்டாக்குவது. ஓங்கு புகழ் ஒற்றிக் கடலருகே நிற்கும் கரும்பு - பெரும் புகழ் பெற்ற திருவாகிய இறைவன் ஒற்றிக் கொண்டிருக்கும் கடல் போல நீர் கொண்டதில் துலங்கும் கரும்-பு-கரியபூ-கரிய கண மலராகிய பூ என்றார். கண்ணானது முட்டையை போல் அழகான தோற்றமுடையதாய் மூன்று விழிகளை அதாவது வெள்ளைவிழி கருவிழி கண்மணி என கொண்டதாய் திருவாகிய இறைவன் இதில் ஒளியாக ஒற்றிக் கொண்டிருக்கிறான் என்றும் இந்த கண்மலரைப் பற்றினால் நமக்கு அமுதம் கிடைக்கப் பெற்று பரவசம் அடைவோம் பேரின்பம் பெறுவோம் எனக் கூறுகிறார்.

"உண்மை இதுகாண் ஒளியிருந்த வீடது காண் உண்மை சிவனிருக்கும் ஊரு காண்"

ஒளியிருந்த வீடு -நம் கண்ணில்தான் ஒளி உள்ளது. உண்மை சிவன் இருக்கும் ஊர் - உண்மை சிவம் ஒளியே - அது இருக்கும் இடம் நம் கண்களே. அதாவது ஒளியிருந்த வீடாகிய கண்ணை சிவன் இருக்கும் ஊராகிய கண்ணை காணவேண்டும். இதுதான் உண்மை என்கிறார்.

"கண்ணாலே ஞானம் கருதாமல் நெஞ்சேநீ
எண்ணாத மாய்கையெல்லாம் எண்ணுகிறாய் - நண்ணாய்கேள்
பார்க்க வேண்டும்தனையும் பத்தரை மாற்றுத்தங்கம்
ஆக்கப் போகாதோ உன்னால்".

எவ்வளவு எளிமையாக கூறியிருக்கிறார் பாருங்கள்! பட்டினத்தார். ஞானம் அடைய நமக்கு வழி கூறுகிறார். கண்ணால்தான் சாதனை புரிந்து ஞானம் அடைய வேண்டும். இதை நெஞ்சே நீ அறிவாயாக என்கிறார். ஆனால் நீ அதை விடுத்து மாயை வசப்பட்டு வேண்டாததெல்லாம் எண்ணுகிறாய் என கூறுகிறார். மேலும் கண்மூலம் சாதனை செய்துதான் தன்னையும் உணர வேண்டும் என்றும் அதன்மூலம் உன் ஊன உடல் பத்தரை மாற்று பொன்னாக ஒளிர்விட்டு பிரகாசிக்கும் என்றும் கூறியுள்ளார்.

இடைக்காடர்

கண்ணுள் மணியைக் கருதிய பேரொளியை
விண்ணின் மணியை விளக்கொளியைப் போற்றீரே

நமது கண்ணுள் உள்ள கிருஷ்ணமணியை - அதில் உள்ள பேரொளியை-விண்ணாகிய தலத்தில் உள்ள கண்மணியை - கண்ணாகிய விளக்கின்-ஒளியை-இறைவனைப் போற்றுங்கள் என்கிறார்.

இருத்தல் வேண்டும். ஆகாரம் அரை, நித்திரை அரைக்கால், மைதுனம் வீசம், பயம் பூஜ்யம் ஆக வேண்டும். சுத்த சத்துவ ஆகாரங்களை புசித்து இல்வாழ்வான் 16 தினத்திற்கொருதரம் ஆபாசப்பட்ட சுக்கிலத்தை நீக்கி, இரவில் 12 மணி முதல் 3 மணிவரை மட்டுமே தூங்கி, பயம் எள்ளளவேனும் இல்லாமல் வாழ்வோமானால் இத்தேகம் நீடிக்கும். மைதுனம் இல்வாழ்வானுக்கு ஊற்றுக் கேணி நியாயத்தை ஒக்கும். ஆண்டவருடைய திருவடியில் சதா ஞாபகமுடையவனுக்கு கோசத் தடிப்பு உண்டாகாது. சிட்டம் போன்ற சுக்கில ஆபாசம் நேரிடாது. சுக்கிலமாகிய திரியை விசேஷம் தூண்டிச் செலவு செய்துவிட்டால் சீவனாகிய ஒளி அணைந்துவிடும். ஜாக்கிரதையாக இருங்கள்.

"ஒத்தவிடத்து நித்திரை கொள்" - ஔவையார்

"சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை - உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்."

11. மூலிகை

கரிசாலையை தினே தினே பச்சையாகவாவது சமையல் முதலிய வகையிலாவது சாப்பிட வேண்டும். இது பிரதம உள்ளுடம்பாகியதை நீடிக்கப் பண்ணும். எவ்வித தந்திரத்தினாலாவது தினம் தினம் உட்கொண்டால் தேகக் கெடுதியாகிய அசக்தம் நீங்கி தேகம் வலுவுள்ளதாய் நெடுநாளைக்கு இருக்கும். முக்தியடைவதற்கு சகாயமாயுமிருக்கும். ஜலமில்லாத இடத்தில் உள்ளது காரமாயிருக்கும் அது விசேஷ நன்று. தந்த சுத்தி செய்து அண்ணாக்கில் தர்ஜினி விரலால் தேய்க்க கரிசாலையால் பித்த நீர் கப நீர் வெளியாகி கண்ணொளி விசேஷிக்கும். அது போலவே அறிவை விளக்குவதற்கும் கவன சக்தி உண்டுபண்ணுவதற்கும், கரணம் ஒய்வதற்கும், கபத்தை அரிப்பதற்கும் யோக்கியதை உடைய ஔஷதி தூதுளை, கரிசாலை, தூதுளை இவ்விரண்டும் ஞானத்தை கொடுக்கும் மூலிகைகள்.

"இரைதேட எடுக்கும் முயற்சியை இறைவனை தேடுவதிலும் காட்டு"

"காலையில் இஞ்சி கடும்பகல் சுக்கு
மாலையில் கடுக்காய் மண்டலம் உண்டால்
கோலை ஊன்றிக் குறுகி நடப்பவன்
காலை வீசிக் குலுக்கி நடப்பனே" - தேரையர்

12. ஏழு திரைகள்

இப் பவுதிக உடம்பிலிருக்கிற நீ யாரெனில் நான் ஆன்மா - சிற்றணு வடிவினன். இந்த அணு கோடி சூரியப் பிரகாசமுடையது. லலாடஸ்தானம் இருப்பிடம். கால்பங்கு பொன்மை முக்கால் பங்கு வெண்மை கலந்த வண்ணம். இப்படிப்பட்ட ஆன்மப் பிரகாசத்தை மறைக்க மாயா சக்திகளாகிய ஏழு திரைகளுண்டு. குரு உபதேசம் பெற்று ஞான சரியை நெறிநின்று இடைவிடாது நன்முயற்சியில் பழகி ஒழுக்கம் நிரம்பிக் கருணையே வடிவாக நிற்கும் விசார சங்கல்பமுண்டானால் ஏழு திரைகளும் நீங்கி ஆன்ம தரிசனம் காணலாம். சுத்த சன்மார்க்கத்துக்கு அனுபவ ஸ்தானங்கள் கண்டத்துக்கு மேல், மேற்படி உபாயங்கள் மூலம் ஏமசித்தி, ஞானசித்தி பெறுவதற்கும், சாகாத கல்வியை தெரிவிப்பதும், மரணமிலா பெருவாழ்வு வாழ வழி காட்டுவதும் இந்து மதம் தவிர வேறெதுவுமில்லை.

"அவனன்றி ஓர் அணுவும் அசையாது"

"தன்னை யறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்
பின்னை வினையைப் பிடித்து பிசைவர்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே" - திருமூலர்

13. சுக்கிலம்

சுக்கிலம் மேலேற்றும் பழக்கத்திற்கு பத்தியம் தூக்கம் சோம்பல் ஆகாது. விந்து மேலேறுவதே ஊர்த்துவரேதஸாம். சுக்கிலம் மேலே ஏறுவதாவது. கீழே சுக்கில பையில் சேர்வது குறைந்து மேலே பிரமரந்திரத்தில் சேர்வது மிகுதிப்படுதலாம். சப்த தாதுக்களுள் அஸ்தி மூலாதாரத்திற்கும், மேதை சுவாதிட்டானத்திற்கும், மாமிசம் மணிபூரகத்திறகும், உதிரம் அனாகதத்துக்கும், துவக்குவிசுத்திக்கும், மச்சை ஆக்ஞைக்கும் சுக்கிலம் சகஸ்ராரத்திற்கும் உரியன. உற்பத்தியாகும் சுக்கிலத்தில் இரண்டரை வராகனெ டைக்கு ஒரு வராகனெடை கோச நுனியிலும், ஒரு வராகனெடை நாபியிலும், அரை வராகனெடை பிரமரந்திரத்திலும் சேர்கின்றது. கோசத்தில் சேர்வது புணர்ச்சியில் வெளிப்பட்டு கருத்தரிக்கச் செய்வது. பிரமரந்திரத்தில் சேர்வது அமுதமாகிறது. காமத்தால் விந்து கீழிறங்கும். ஞானத்தால் மேலேறும்.

"விந்து விட்டவன் நொந்து கெட்டான்"

கண்மலர் பதினாறு

முடிவாக ஒன்று - ஒன்றே தான்

ஆதியும் ஒன்றுதான்! அந்தமும் ஒன்றுதான்!! ஒன்றுக அதிலேதான்!!

இந்நூலை எழுதி வெளியிட வேண்டும் என என்னுள் இருந்து தூண்டியதும் ஒன்றுதான்! முதலில் அட்டைப் படத்தைத்தான் வடிவமைத்தேன். ஆரம்பத்திலேயே ஞான ரகசியம் வெளியாகி விட்டது. பின்னர் ஒவ்வொரு கட்டுரையிலும் வெளிப்பட்டே வந்துள்ளது, மெய்ப்பொருள் இணையாக உள்ள கண்கள் என்பதை என் குருநாதர் ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் எனக்குச் சுட்டி உணர்த்த நானும் பற்றிக் கொண்டேன் திருவடியை. எத்தனையோ மகான்கள் நம் பாரத தேசத்தில் அவதரித்திருக்கிறார்கள். அவர்கள் உலகருக்கு உணர்த்திய ஞானத்தைத் தான் வாங்கி அவைகளின் தொகுப்பாக எளிமையான நடையில் திருவருட்பா எனும் ஞானக் களஞ்சியத்தை சென்ற 150 வருடங்களுக்கு முன் தமிழகத்தில் வடலூரில் உலா வந்த திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளியிருக்கிறார்கள். திருவருட்பா ஒன்றைப் படித்தாலே உணர்ந்தாலே அனைத்து ஞானிகள் நூற்களையும் படித்ததற்கு சமம்.

உலகர் அனைவருக்கும் மூலமான - ஒன்றான - இறைவனை எல்லோரும் அறிந்து ஒன்றியிருத்தலே மேலாம் பரகதிக்கு உபாயம். நான் அறிந்ததை இயன்றவரை தெளிவுபடுத்தியிருக்கிறேன். என்னுள் இருந்து இதை வெளிப்படுத்திய பெருமை என் குரு ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் - நமது சற்குரு திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள் - ஆகிய இரு கண்மணிகளையே சாரும். ஜாதி, மதம், இனம், மொழி முதலிய அனைத்து பேதங்களையும் கடந்தது ஞானம். இதில் எதை யார் பற்றினாலும் அவர்கள் ஞானம்பெற இயலாது. எந்தவித பாகுபாடுமின்றி, எவ்வுயிரும் தம் உயிர்போல் எண்ணி அன்பு காட்டும் சீவகாருண்ய சீலர்களே இறைவன் அருளைப் பெற முடியும். ஞானமடைவர். நற்குணங்கள் பெற்று நல் ஒழுக்க நெறிநின்று நல்லவர்களோடு கூடி மனிதன் மனிதனாக வாழ்வானாகில் இறைவனே அவனை நாடி வருவார். இதுதான் உண்மை.

ஆன்மநேய ஒருமைப்பாடு கொண்டு வாழும் மெய்யன்பர்களே, வள்ளலாரே இந்நூல் கண்மணி மாலையின் பெருமையை நாம் உணர 150 ஆண்டுக்கு முன்னரே பாடி அருளியுள்ளார்கள்.

கண்ணுதலே நின் அடியார் தமையும் நோக்கேன்
கண்மணிமாலைக் கெனினும் கனிந்து நில்லேன்
- திருவருட்பா 1371

எவ்வளவு பொருத்தமாக அமைந்துள்ளது பாருங்கள்! இந்த என் முயற்சி வெற்றி பெற்று விட்டதாகவே கருதுகிறேன். நான் இந்தப் பிறவி எடுத்த பயனை இந்த ஞான நூலை - கண்மணிமாலையை வெளியிட்டதின் மூலம் அடைத்து விட்டேன். மிகவும் மகிழ்கிறேன். இதற்காக என்றென்றும் இறைவனை கண்ணுற்றுப் போற்றுவேன்.

திவ்ய ஆத்ம சொரூபிகளே மீண்டும் மீண்டும் கூறுகிறேன். இந்நூலில் சொல்லியவைகளை தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் சிந்தித்தால் நிச்சயம் தெளிவு பெறுவீர்கள். ஞானிகள் ஆசி பெறுவீர்கள். நற்கதியடைவீர்கள். சிலரது தவறுகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் தவறு செய்யாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்! பாமரர்கள் தவறான பாதைக்கு போய்விடக் கூடாதே என்பதற்காகத்தான்! ஞானிகள் ரகசியம் என உரைத்ததை வெட்ட வெளிச்சமாக்கி இந்த கண்மணிமாலை கோர்க்கப்பட்டுள்ளது.

அன்னம் போல் பகுத்து அறிந்து - காகம் போல் கண்டு உணர்ந்து - கொக்கு போல் காத்து இருந்தால் - மனிதனும் தெய்வமாகலாம்.

கடைசியாக ஒன்று

"சிற்றம் பலமுஞ் சிவனும் அருகிருக்க
வெற்றம் பலந்தேடி விட்டோமே - நித்தம்
பிறந்திடத்தைத் தேடுதே பேதைமட நெஞ்சம்
கறந்திடத்தை நாடுதே கண்" - பட்டினத்தார்

ஆன்மாக்களே, இந்நூலை நீங்கள் சரியாக படித்து உணர்ந்திருப்பீர்களானால் இந்தப் பாடலுக்குரிய ஞான விளக்கத்தை சரியாக புரிந்து கொள்வீர்கள்! அதை விடுத்து இந்தப்பாடலை ஆபாசமாக நீங்கள் நினைத்தால் உங்களுக்கு இது எதுவுமே புரியவில்லை என்று பொருள். சிந்தித்துப் பாருங்கள். சிற்றம்பலமும் சிவனும் அருகிருக்க- சிற்றம்பலமாகிய கண்ணும் அதில் ஒளியாக நின்றிலங்கும் சிவனும் அருகிருக்க, வெற்றம்பலந்தேடி விட்டோமே - ஒன்றுமில்லாத வெருமையான வெளியிடங்களை தேடிவிட்டோமே; நித்தம் பிறந்திடத்தை தேடுதே பேதை மட நெஞ்சம் - நம் பேதை மனம் தினமும் நாம் பிறந்த இடத்தை தேடுகிறது. நாம் பிறந்த இடம் எது? நாம் ஜீவாத்மாக்கள் அல்லவா? நாம் பரமாத்மாவிலிருந்துதானே பிறந்தோம்! நமது பேதை

மனது தினமும் நாம் பிறந்த இடமாகிய பரமாத்மாவையே தேடுகிறது எனக் கூறுகிறார்! கீழான இடத்தை நினைக்காதீர்கள். கறந்திடத்தை நாடுதே கண்-நமது கண்கள் சூரியனும் சந்திரனும் ஆகும் அல்லவா? இந்த இரு ஒளிக்கலைகளும் அகமுகமாக அக்னி கலையோடு கூடும்போது நாம் நம் ஜீவனை ஒளியாக நம் முன்னே காணலாம்! நாதத்தொனி கேட்கலாம்! பின்னர் நமக்கு இறைவன் பிரசாதமாக சகஸ்ராராரத்திலிருந்து அமுதம் சொட்டும். அந்த மங்காத பால் கறக்கும் இடத்தையே நமது கண் நாடுதே என பட்டினத்தார் கூறுகிறார். எவ்வளவு உயர்ந்த ஞானம்! தவறாக பொருள் கொண்டு மோசம் போகாதீர்கள். எல்லா ஞானவான்களும் மிக உயர்ந்த பொருளையே - இறைவனையே - அடையும் வழியையே கூறுகின்றனர்.

எனவே, "மெய்ப்பொருளை" உணருங்கள்! "திருவடியை" சரணடையுங்கள்! "கண்மணிமாலை"யைப்பற்றி கனிந்து நில்லுங்கள்! மரணமிலா பெருவாழ்வு வாழலாம்!

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன்



பகவதியே பாலா பராசக்தி கன்னியே
இகமதிலே யாம்வாழ இருந்திடு என்னிதயமே
சகமதிலே சன்மார்க்க சான்றோர் நிலைக்கவே
சுகமதிலே தொண்டிலே சுகானுபூதி அடையவே



திருவடி உபதேசம் பெற்றவர் மெய்யுணர்வு பெற திருவடி தீட்சை பெற தங்க ஜோதி ஞான சபைக்கு வருக! உங்கள் நடுக்கண்ணை திறந்து ஞானம்பெற வழிகாட்டுவார் வள்ளலார்! கண்ணை திறந்து தான் தவம் செய்ய வேண்டும்!